# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பத்தாவது பாராளுமன்றம்
**(முதலாவது கூட்டத்தொடர்)**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 250**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் இல 125(5) இன் கீழ் சமர்ப்பிக்கப்படும்

# பொது மனுக்கள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் 2025.02.20 ஆம் திகதி முதல் 2025.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான அறிக்கை

**பொது மனுக்கள் பற்றிய குழுவின் தவிசாளர்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க அவர்களால்**
**சமர்ப்பிக்கப்பட்டது.**

2025 ஒகத்து மாதம் 07ஆம் திகதியன்று பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**2025 ஒகத்து மாதம் 07ஆம் திகதி அச்சிடுவதற்கு பாராளுமன்றத்தினால் கட்டளையிடப்பட்டது.**

**- உள்ளடக்கம்-**


| | | **பக்க இல** |
|---|---|---|
| i | அறிக்கை | 1 |
| ii | பொது மனுக்களை விசாரிப்பதற்கு பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தல் | 2 |
| iii | பொது மனுக்கள் பற்றிய குழுவின் பணிப் பொறுப்பு | 3 |
| iv | தற்போதைய பொது மனுக்கள் பற்றிய குழுவின் செயற்பாடுகள் | 3 |
| v | பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு 2025.05.31 ஆம் திகதியளவில் ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் | 4 |
| vi | விஷேட அவதானிப்புகள் | 6 |
| vii | இதர அவதானிப்புகள் | 6 |
| viii | நிலையியற் கட்டளைகள் மீதான திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவுகள் | 7 |
| ix | விதப்புரைகள் | 8 |

**அறிக்கை**

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கு இலங்கைச் சனநாயக சோசலிஷக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் இல 125(1)[1] இன் பிரகாரம் தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத 29 உறுப்பினர்களைக் கொண்ட[2] பொது மனுக்கள் பற்றிய குழு கீழ்காணும் உறுப்பினர்களை கொண்டுள்ளது.

2025.01.09 ஆம் திகதியன்று கௌரவ சபாநாயகர் அவர்களின் அறிவிப்பின் பிரகாரம், பொது மனுக்கள் பற்றிய குழுவில் சேவையாற்றுவதற்கு கீழ் காணும் உறுப்பினர்கள் பெயர் குறிப்பிட்டு அறிவிக்கப்பட்டனர்.

1 கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க, பா.உ (தவிசாளர்)

2 கௌரவ அஜித் அகலகட, பா.உ

3 கௌரவ உபுல் கித்சிறி, பா.உ.

4 கௌரவ அஜித் கிஹான், பா.உ

5 கௌரவ அசோக குணசேன, பா.உ,

6 கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,பா.உ

7 கௌரவ நந்தன பத்மகுமார, பா.உ,

8 கௌரவ நிசாந்த பெரேரா, பா.உ

9 கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க, பா.உ,

10 கௌரவ சுனில் ரத்னசிறி, பா.உ,

11 கௌரவ திருமதி உஏ.எம்.எம்.எம் ரத்வத்தே, பா.உ,

12 கௌரவ மனோஜ் ராஜபக்ஷ, பா.உ.,

13 கௌரவ செல்வி அம்பிகா சாமிவேல், பா.உ.,

14 கௌரவ முஹம்மட் பைசல், பா.உ.,

2025.03.21 ஆம் திகதியன்று கௌரவ சபாநாயகர் அவர்களின் பிரகாரம், பொது மனுக்கள் பற்றிய குழுவில் சேவையாற்றுவதற்கு கீழ் காணும் உறுப்பினர்கள் பெயர்குறித்து நியமிக்கப்பட்டனர்.

15 கௌரவ உபாலி சமரசிங்ஹ, பா.உ,

16 கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன, பா.உ.,

17 கௌரவ திலீப் வெதஆரச்சி, பா.உ,

18 கௌரவ கே. காதர் மஸ்தான், பா.உ.,

19 கௌரவ இம்ரான் மஹரூப், பா.உ.,

20 கௌரவ (திருமதி) ரோஹிணி குமாரி விஜேரத்ன, பா.உ.,

21 கௌரவ வருண லியனகே, பா.உ.,

22 கௌரவ சட்டத்தரணி யூ.பீ. அபேவிக்கிரம, பா.உ,

[1] 2024.12.06 மற்றும் 2025.03.19 ஆம்திகதி பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கிணங்க முறையே குழுவின் உறுப்பினகைளின் எண்ணிக்கை 19 ஆகவும் 29ஆகவுமாகும்.

[2] எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கான வெற்றிடம் நிறப்பப்பட வேண்டியுள்ளது.

23 கௌரவ சமிந்த லலித் குமார, பா.உ.,

24 கௌரவ எம்.ஏ.எம். தாஹிர், பா.உ.,

25 கௌரவ (வைத்தியர்) சந்தருவன் மதரசிங்ஹ, பா.உ,

26 கௌரவ சானக்க மாதுகொட, பா.உ.,

27 கௌரவ சட்டத்தரணி (திருமதி) ஹிருனி விஜேசிங்க, பா.உ.,

28 கௌரவ ஜகத் வித்தான, பா.உ.,

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கு, 2025 சனவரி மாதம் 23 ஆம் திகதி முதல் தடவையாக கூடிய பொது மனுக்கள் பற்றிய குழு, தவிசாளர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்கவின் பெயர் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டு நியமிக்கப்பட்டதோடு 2025 பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் குழுவினால் ஆரம்பிக்கப்பட்டன.

அவ்வாறு கூடிய குழுவானது, 2025 பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 2025 மே மாதம் 31 ஆம் திகதி வரை 12 குழு அமர்வுகளை நடாத்தியுள்ளதோடு 70 மனுக்கள் மீதான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

பொது மனுக்கள் பற்றிய குழுவினால் விசாரிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பாக குழு தமது இறுதி அபிப்பிராயத்தையும் குறித்த விசாரணைகளுக்கிடையே அவதானிக்கப்பட்ட விடயங்களையும் **இந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ளதோடு நிலையியற் கட்டளைகள் இல 125(6) மற்றும் 125(7)** இன் பிரகாரம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கௌரவ சபாநாயகருக்கு பொது மனுக்கள் பற்றிய குழுவினால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

**நிலையியற் கட்டளைகள் இல** 125(6) *“அறிக்கையானது சபாபீடத்தில் இடப்படும் போது, சபாநாயகர் அத்தகைய அறிக்கையின் உள்ளடக்கத்தினை உரிய அமைச்சருக்கு அவரது அவதானிப்புகளுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வவதானிப்புகள் எட்டு வாரக் காலப்பகுதியினுள் அமைச்சரினால் எழுத்துமூலம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்.”*

**நிலையியற் கட்டளைகள் இல 125(7**) *“உரிய அமைச்சரின் அவதானிப்புகளைப் பெற்றபின்னர் சபாநாயகர் அத்தகைய அவதானிப்புகளின் பிரதியொன்றைத் தவிசாளருக்கும் மனுவைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். வழங்கப்பட்ட பதில் தொடர்பில் திருப்தியடைய முடியாதவிடத்து தகுந்த தீர்வுகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் கோரப்பட வேண்டும். அமைச்சரினால் ஒரு மாதகாலத்திற்குள் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அதனை நிறைவேற்றாமைக்கான காரணங்களை எழுத்துமூலம் முன்வைப்பதுடன் நிவாரணம் வழங்குவதற்காகக் கருத்திற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கை குறிப்பிடப்பட வேண்டும்.”*

## 2.பொது மனுக்களை விசாரிப்பதற்காக பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தல்.

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் இல 30(1) இன் கீழ் உறுப்பினரொருவரினால் கௌரவ சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற பொது மனுக்கள், நிலையியற் கட்டளைகளுக்கு இணங்கியதாக இருப்பின் கௌரவ சபாநாயகரின் அங்கீகாரத்துடன் குறித்த மனுவை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு உறுப்பினருக்கு அனுமதி வழங்கப்படுவதோடு, அவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற பொது மனுக்கள் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் இல 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

### 3. பொது மனுக்கள் பற்றிய குழுவின் பணிப்பொறுப்புகள்

பாராளுமன்றத்தின் நிலையியற் கடடளைகள் இல 125 (2) ஆம் ஏற்பாடுகளின் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் மனுக்கள் தொடர்பாக நிலையியற் கடடளைகள் இல 125 (3) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பகிரங்க அலுவலரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை ஏதேனும் மனு வெளிக்காட்டுகின்றதென பொது மனுக்கள் பற்றிய குழு கருதுமிடத்து, பொது மனுக்கள் பற்றிய குழு அத்தகைய மனு பற்றி விசாரணை செய்யலாம் அல்லது அத்தகைய மனுவை விசாரித்து அறிக்கையிடுவதற்காக நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்) ஆற்றுப்படுத்தலாம்.

அவ்வாறு விசாரிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பாக நிலையியற் கடடளைகள் இல 125(4) மற்றும் 125(5) இன் பிரகாரம் குழு தமது அபிப்பிராயத்தை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

### 4. தற்போதைய பொது மனுக்கள் பற்றிய குழுவின் செயற்பாடுகள்

சட்டவாக்கம் என்ற வகையில் பாராளுமன்றத்திற்கு இலங்கைச் சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் மூலமும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் மூலமும் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் நம்பகத்தன்மையை பாதுகாத்து, குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பொது மனுக்கள் மூலம் மனுதாரர்கள் கோரியுள்ள நிவாரணம், பகிரங்க அலுவலரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை காரணமாக குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களில் மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொண்டு அமைச்சு/நிறுவனத்திடமிருந்து அறிக்கை கோரப்படுவதோடு அவ்வாறு கோரப்படும் அறிக்கையின் தெரிவு செய்யப்பட்டதொரு பகுதியை மனுதாரருக்கு ஆற்றுப்படுத்தியதை தொடர்ந்து மனுதாரரின் கருத்துக்களும் எழுத்துமூலமாக கோரப்படும்.

ஏற்புடைய அமைச்சு/நிறுவனத்திடமிருந்து எழுத்துமூலமாக கருத்துக்கள் கோரப்பட்டதை தொடர்ந்து மனுதாரரையும் அடிப்படை உரிமை மீறப்படுதல் அல்லது வேறு அநீதி இழைக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சு/நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலர்களையும் குழுவிற்கு முன்னிலைப்படுத்தி மனு மீதான விசாரணை மேற்கொள்ளப்படும்.

அமைச்சு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு குழுவினால் நியாயமானதொரு கால அவகாசம் வழங்கப்படுவதோடு அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் மனுதாரருக்கு ஏற்படும் அநீதியை தவிர்ப்பதற்கு அந்த அறிக்கை இல்லாமலேனும் மனுவை பரிசீலிக்க நேருமெனவும் அமைச்சு அறிக்கையினை குழுவிற்கு கோரிய போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மனு மீதான விசாரணையினை மேற்கொள்ளும் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் போதுமானதல்ல என குழுவினால் அவதானிக்கப்படும் பட்சத்தில் மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்படுவதோடு போதிய தகவல்களை சமர்ப்பிக்குமாறு இரு தரப்புகளுக்கும் அறிவிக்கப்படுகின்ற அதேவேளை அதுவரை தமது அபிப்பிராயத்தை தெரிவிப்பதை குழு தவிர்த்துக்கொள்ளும்.

மனுதாரரின் தற்றுணிவுக்கமைய அவர் சார்பாக காப்பு அலுவலரொருவர் தோற்றுவதற்கும் குழு அனுமதியளித்துள்ளதோடு மனுதாரர் குறித்த விசாரணை தினத்தன்று அதில் தோற்றுவதற்கு தவறும் பட்சத்தில் மனுதாரரின் இணக்கத்தின் பேரில் மனு மீதான விசாரணை ஒரு தலைப்பட்சமாக இடம்பெறும். மனுதாரரினால் நேரடியாக தோற்றுவதற்கு முடியாத நியாயமானதொரு காரணம் இருக்கும் சந்தர்ப்பங்களில் அவர் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு நபரொருவருக்கு குறித்த மனு மீதான விசாரணையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

மனு, குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து விசாரணையை மேற்கொள்வதற்கு

முன்னதாகவோ விசாரணையின் போதோ எவரேனுமொரு மனுதாரர் உயிரழப்பாரானால் அவரின் சட்ட ரீதியான பிரதிநிதியொருவருக்கு மனுதாரர் சார்பாக தோற்றுவதற்கு கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் அவ்வாறு தோற்றுவதற்கும் குழு அனுமதி அளித்துள்ளது.

மனுவை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு மனுதாரர் உரிய ஆர்வம் காட்டாமல் இருப்பாரானால், மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்கு மூன்று அழைப்புகளுக்கு பங்கேற்பை உறுதிப்படுத்த தவறுவாரானால், அந்த மனு மீதான விசாரணையை முடிவுறுத்துவதற்கு குழு தீர்மானித்துள்ளது.

மனுவை சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் மனு மீதான விசாரணையின் போது பொது மனுக்கள் பற்றிய குழுவில் கலந்துகொள்வதற்கு அனுமதியளிக்கப்படுவதோடு, குறித்த விசாரணையின் போது கண்காணிப்பதற்கு மாத்திரம் அனுமதியளிக்கப்படும்.

மனுதாரரின் அந்தரங்க விடயங்களை பாதுகாக்கும் வகையில் விசாரணை நடவடிக்கைகளின் போது ஊடகங்களுக்கு அனுமதி அளிக்கப்படாத அதேவேளை, அறிக்கையிடலின் போதும் மனுதாரரின் மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கும் சகல விடயங்களையும் அறிக்கையிடுவதை தவிர்க்கவும் குழு தீர்மானித்துள்ளது.

மனு மீதான விசாரணையில் மனுதாரர் அநீதிக்குள்ளாக்கப்பட்டுள்ளாரென குழு அவதானிக்குமிடத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நீதியானதொரு அபிப்பிராயத்தை, நிலவும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய தெரிவித்தல் மற்றும் நிவாரணமளித்தல் பொது மனுக்கள் பற்றிய குழுவின் பிரதான நோக்கமாக கருதப்படுவதோடு, மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மக்கள் மீது அரசப் பொறிமுறையை வலுவூட்டும் நிறுவனங்கள் மூலம் இடம்பெறும் அநீதிகளை தடுப்பதும் வருங்காலங்களில் அவ்வாறான அநீதிகளை தடுப்பதும் நிலவும் அரச பொறிமுறையை நோக்காக கொண்ட நிறுவனங்களின் நிருவாக ரீதியான, சட்ட ஏற்பாடுகளின் திருத்தங்கள் தேவைப்படுவதாக குழு அவதானிக்கும் பட்சத்தில் அந்த அவதானிப்புகளை சமர்ப்பிப்பதன் மூலம் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதையும் குழு தமது அபிலாஷையாக கருதுகின்றது.

இவ்வாறு மனுக்கள் மீதான விசாரணையின் போது குழுவினால் அவதானிக்கப்படுகின்ற அவதானிப்புகளையும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு குழு தீர்மானித்துள்ளதோடு, சட்டவாக்கத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை அரச நிறுவனங்கள் கவனத்தில் எடுத்து பொது மக்களுக்கு மேலான நீதியான சேவையினை வழங்குமென்பதும் குழுவின் அபிப்பிராயமாகும்.

எவ்வாறாயினும், குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுவை விசாரிக்கையில், மனுதாரரினால் நிகழ்த்தப்பட்டுள்ள யாதேனுமொரு தவறான செயல் அல்லது தட்டிக்கழிப்பு காரணமாக மனுதாரர் கோரியுள்ள நிவாரணைத்தை வழங்க முடியாதென மனு மீதான விசாரணையின் போது குழு அவதானிக்குமிடத்து குழு ஏற்புடைய மனு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தமது அபிப்பிராயமாக, கோரியுள்ள நிவாரண உரித்தை விதப்புரைக்காத அதேவேளை, குறித்த மனுவை தள்ளுபடி செய்து விடும்.

## 5. <u>பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு 2025.05.31 ஆம் திகதியளவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களும் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும்</u>

கௌரவ சபாநாயகரின் அங்கீகாரத்தைத் தொடர்ந்து உறுப்பினர்களால் பாராளுமன்றத்தில் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2025.05.31 ஆம் திகதியளவில் பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 385 ஆகும்.

பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற மனுக்களை விசாரிக்கையில்

மனுதாரர்கள் சார்பாக குறித்த மனு தொடர்பாக விளக்கமளிப்பதற்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்படுவதோடு, மனுக்களை விசாரிக்கும் போது வெளிவருகின்ற விடயங்கள் மற்றும் விளக்கங்கள், பரிசீலனைகள் மற்றும் யாதேனும் ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் இதர ஆவணங்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் குழுவினால் ஆராயப்படுகின்ற காரணத்தினால் மனுவொன்றை விசாரிப்பதற்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்படுவதன் மூலம் மற்றும் சகல அபிப்பிராயங்களையும் பகுப்பாய்வு ரீதியாக பரிசீலித்து குழு இணங்கும் இறுதி அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கு குழுவிற்கு மனுவொன்றை விசாரிப்பதற்காக அமர்வொன்றின் போது நியாயமான நேரத்தை செலவிட நேர்ந்துள்ளது.

அதன் பிரகாரம், 2025 மே மாதம் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவில் கீழ் காணும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

அ) பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு கிடைக்கும் மனுக்களின் அளவு எண்ணிக்கையில் அதிகமாக காணப்படல்

ஆ) குழுவினால் இச் சகல மனுக்களையும் ஆராய்வதென்பது கடினமாக காணப்படல்.

இ) மேற்படி மனுக்கள் தொடர்பாக தேவையான தொடர் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் இல 125 (8) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது மனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களைக் கொண்ட உப குழுவொன்றை நியமித்தல்.

அதன் பிரகாரம், நிலையியற் கட்டளைகள் இல 125 (8) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அடிப்படை விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவதானிப்புகளை உள்ளடக்கிய அறிக்கையினை ஆற்றுப்படுத்துவதற்கு பொது மனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களையே உள்ளடக்கியதான 3 உப குழுக்கள் நியமிக்கப்பட்டதோடு கீழ் காணும் அங்கத்துவ உறுப்பினர்களை கொண்டதாக மேற்படி உப குழுக்கள் செயற்படும்.

**<u>உப குழு - I</u>**

(i) கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க, பா.உ (தவிசாளர்)
(ii) கௌரவ அசோக குணசேன, பா.உ, அங்கத்தவர்.
(iii) கௌரவ அஜித் கிஹான், பா.உ, அங்கத்தவர்.
(iv) கௌரவ உபுல் கித்சிறி, பா.உ, அங்கத்தவர்.
(v) கௌரவ (திருமதி) ரோஹிணி குமாரி விஜேரத்ன, பா.உ, அங்கத்தவர்.

**<u>உப குழு - II</u>**

(i) கௌரவ மனோஜ் ராஜபக்ஷ, பா.உ (தவிசாளர்)
(ii) கௌரவ நிசாந்த பெரேரா பா.உ, அங்கத்தவர்
(iii) கௌரவ பிரகீத் மதுரங்க, பா.உ அங்கத்தவர்
(iv) கௌரவ சட்டத்தரணி (திருமதி) ஹிருனி விஜேசிங்க, அங்கத்தவர்.
(v) கௌரவ ஜகத் வித்தான, பா.உ, அங்கத்தவர்

**<u>உப குழு - III</u>**

(i) கௌரவ சட்டத்தரணி யூ.பீ. அபேவிக்கிரம, பா.உ (தவிசாளர்)
(ii) கௌரவ சுனில் ரத்னசிறி, பா.உ, அங்கத்தவர்
(iii) கௌரவ அஜித் அகலகட, பா.உ, அங்கத்தவர்
(iv) கௌரவ செல்வி அம்பிகா சாமிவேல், பா.உ, அங்கத்தவர்.
(v) கௌரவ சமிந்த லலித் குமார,பா.உ, அங்கத்தவர்.

பொது மனுக்கள் பற்றிய குழு 2025.05.31 ஆம் திகதியளவில் மனுக்களை விசாரிப்பதற்காக 12 அமர்வுகளை நடாத்தியுள்ளதோடு விசாரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 70 ஆகும்.

பரிசீலிக்கப்பட்ட 70 மனுக்கள், கோரப்பட்ட நிவாரணம், குழுவின் அவதானிப்புகள் மற்றும் குழுவின் பரிந்துரைகள் பற்றிய தகவல்கள் இணைப்பு I இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 6. 10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கு ஏற்புடையதாக குழுவினால் நிறைவேற்றப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள்

(i) பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை சேர்த்தல் தொடர்பான மனுக்களை பரிசீலிப்பதில்லையென்பது..

(ii) குழுவினால் ஒரு தடவை நிராகரிக்கப்பட்ட மனுக்கள், குழுவினால் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டாலே தவிர அவை பரிசீலிக்கப்பட மாட்டாதென்பது.

(iii) அரசக் கொள்கைகளுக்கு முரணான விடயங்கள் தொடர்பான மனுக்களை மனுதாரரை அழைக்காமலே விசாரித்தல்.

(iv) மனுவுக்குப் பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் அங்கத்தவராக இல்லாத சந்தர்ப்பங்களில், குறித்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் திகதியை ஏற்புடைய உறுப்பினருக்கு அறிவித்தல் விசாரணையின் போது உறுப்பினருக்கு கலந்து கொள்ள அனுமதியளித்தல்..

(v) 15 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவமொன்று தொடர்பாக முதல் தடவையாக குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லையென்பது.

(vi) மனுவை முன்னெடுத்துச் செல்வதற்கு மனுதாரர் ஆரவங்கொள்ளவில்லை எனில், அந்த மனுவின் நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்.

(vii) யாதேனுமொரு மனு தொடர்பாக குறித்த அமைச்சிடம் கோரப்படும் அறிக்கை மூன்று மாதங்களுக்குள் கிடைக்கப்பெறவில்லை எனில், அந்த மனுவை அமைச்சு அறிக்கை இல்லாமலேயே பரிசீலித்தல். .

## 7. விசேட அவதானிப்புகள்

(i) அரச சேவையிலுள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்கள் அநீதிக்கு உள்ளாகுதல் தொடர்பாக கிடைக்கப் பெறுகின்ற பொது மனுக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு எற்பட்டுள்ளதை குழுவால் அவதானிக்கப்பட்டது.

(ii) மனுக்களை விசாரிக்கையில், யாதேனுமொரு மனுதாரர் தொடர்பில் அத்தியாவசியமான தகவல்கள் உள்ளடங்கிய பத்திரங்கள் உரிய நிறுவனங்களிடம் காணப்படவில்லை என்பது விசாரணைகளின் போது அவதானிக்கப்பட்டதுடன், அதற்கமைவாக அரச நிறுவனங்களின் கோப்புகளைப் பராமரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துவது அவசியமாகும் என்பது குழுவால் அவதானிக்கப்பட்டது.

(iii) அலுவலக கடிதங்களுக்கு பதில் அளிக்கையில் ஏற்படுகின்ற தவறுகள் காரணமாக மீளச் சீர்செய்வதற்கு மிகவும் அசௌகரியமான முறையில் அநீதிக்குள்ளாகுதல் மற்றும் போதுமான நீதியை பின்னர் பெற முடியாதுள்ளமை தொடர்பில் அவதானிக்கப்பட்டதுடன், குறித்த காலப்பகுதியினுள் உரிய விடயங்கள் தொடர்பாக பதிலளித்தல்/நடவடிக்கைகளை அமைச்சு/நிறுவனங்களின் மூலமாக மேற்கொள்ளுதல் வேண்டுமென்பது தொடர்பாகவும் அவதானிக்கப்பட்டது.

(iv) ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் போது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைகளை மேற்கொள்கையில் வெவ்வேறாக புள்ளி வழங்குதல் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள்

வெளிப்படையாக காணப்படாமை.

(v) பொதுநிருவாக சுற்றறிக்கைகளை இயைந்தொழுகையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாமை மற்றும் நடைமுறைப்படுத்துவதில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் தாமதங்கள் காரணமாக அரச சேவையிலுள்ள ஊழியர்கள் பதவி உயர்வுகளைப் பெறும்போதும் சம்பள வேதனப் படிகளைப் பெறும் போதும் ஏற்றத்தாழ்வுக்குள்ளாதல் (மாகாண அரச சேவையிலுள்ளவர்களுக்கு வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை முறையாக இயைந்தொழுகாமை)

(vi) ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற ஊழியர்களுக்காக ஒரு தடவை மாத்திரம் செலுத்தும் ரூ. 50,000/- கருணைக் அடிப்படையிலான கொடுப்பனவு உயர்த்தப்பட வேண்டுமென குழு கருதுகிறது.

(vi) பல்வேறு சுற்றறிக்கைகளில், ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைகளில் தகைமைகளை குறிப்பிடும் போது பொருள்கோடல்கள் தெளிவற்றுக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அமைச்சு மட்டத்தில்/நிறுவன மட்டத்தில் குறித்த பிரச்சினைகளைத் துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## 8. <u>வேறு அவதானிப்புக்கள்</u>

**<u>மனுக்கள் நிராகரிக்கப்படுதல்</u>**

(i) மனுதாரர்கள் சமர்ப்பிக்கின்ற மனுக்கள் மாதிரிப் படிவத்திற்கு ஏற்றதாக காணப்படாமையால் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றதால் அதனை குறைப்பதற்குச் சரியான முறையில் மனுக்களை சமர்ப்பிக்கும் மாதிரிப் படிவம் தொடர்பில் உறுப்பினர்கள் மூலமாக மனுதாரர்களைத் தெளிவூட்டுதல் உகந்ததாக இருக்குமென்பது.

**<u>நிலையியற் கட்டளைகளை திருத்துதல் தொடர்பான முன்மொழிவுகள்</u>**

(ii) பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற மனு தொடர்பாக நிலையியற் கட்டளை 30 (8) ஏற்பாடுகளில் காட்டப்படுகின்ற பந்தியானது;

“ஒவ்வொரு மனுவும் சமர்ப்பிக்கப்படும் முன்னர், அதன் ஆரம்பத்தில் அதற்குப் பொறுப்பாயிருக்கும் உறுப்பினரால் ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் குறைந்தபட்சம் இரு முழு நாட்களிற்குச் செயலாளர் நாயகத்திடம் இருக்கத்தக்கதாக அதனைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

**திருத்தம்**

“ஒவ்வொரு மனுவும் அதனை கௌரவ சபாநாயகரின் பெயருக்குச் சமர்ப்பிக்கையில், சமர்ப்பிக்கின்ற உறுப்பினரால் கையொப்பமிட்டு, தமது பெயர்/உத்தியோகபூர்வ இலட்சினையை உள்ளடக்கி” என்றவாறு திருத்தப்படுதல் வேண்டுமென்பது.

**இணைப்பு I**

**1) விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ள மனுக்கள்**

1. **பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 01 | திரு. எஸ். எம். வீரகோன் பண்டா COM/PP/2025/17 சமர்ப்பித்தவர்: கௌரவ (திருமதி) ரோஹிணி குமாரி விஜேரத்ன அவர்கள், பா. உ. 2025.02.20ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: 01/02/03/01/2024 திகதி : 2024.04.03 | சுகயீனம் காரணமாக 3 நாட்கள் ஓய்வு விடுமுறையில் சென்ற போதிலும் உரிய திகதியில் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என்பதற்காக வழங்கப்பட்ட சேவையை விட்டு சென்றதற்கான கட்டளையை நீக்கி தம்மை மீண்டும் சேவையில் அமர்த்தி, சேவைக் காலத்தை கவனத்திற் கொண்டு ஓய்வூதியத்தைப் பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளது. | (அ) முனைப்பான சேவைக் காலப்பகுதி 20 வருடங்களும் 11 மாதங்களாக உள்ளதென்பது<br><br>(ஆ) மனுதாரர் மேன் முறையீடு செய்துள்ளமை. (பகிரங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு) | நிலுவைச் சம்பளம் அல்லது வேறு கொடுப்பனவுகளின்றி மீளச் சேவையில் அமர்த்தி ஓய்வுறுத்தப்படவேண்டுமென விதந்துரைக்கப்பட்டது. |
| 02 | திரு. ஆர்.பீ.கே.ஏ. டபிளியூ.கே. ரணசிங்க COM/PP/2025/22 சமர்ப்பித்தவர்: கௌரவ சட்டத்தரணி யூ.பீ. அபேவிக்ரம அவர்கள், பா. உ. 2025.02.20ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: 02/03/23/21/2022 திகதி : 2022.12.23 | தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளரின் NPC/GO/NGO/POL.VIC/06/27/2016 ஆம் இலக்க மற்றும் 2018.06.19ஆம் திகதிய கடிதத்தினூடாக 2014.01.13ஆம் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கான பதவியுயர்வை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விதப்புரைகளை கவனத்திற் கொள்ளாது தனது பதவியின் மூப்புரிமையை 2014.01.13ஆம் திகதி | அமைச்சரவையின் ஒரே தீர்மானத்திற்குஅமைவாக அலுவலர்களில் ஒரு தரப்பினருக்கு பதவியுயர்வுகளை வழங்கியுள்ளதுடன், இன்னுமொரு தரப்பினருக்கு அடுத்து வரும் திகதியில் பதவியுயர்வுகளை வழங்குவதன் மூலமாக பின்னரான திகதியில் பதவியுயர்வுகளைப் பெற்ற அலுவலர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பது<br>(ஆ) பொலிஸ் | பொலிஸ் ஆணைக்குழுவின் NPC/GO/NGO/POL.VIC/06/27/2016 மற்றும் 2018.06.19ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக 2014.01.13ஆந் திகதி முதல் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியை வழங்குவதுடன் அது தொடர்பில் கிடைக்க வேண்டியுள்ள பதவியுயர்வுகளையும் அதற்குரிய திகதிகளில் வழங்குதல் வேண்டுமெனவும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | முதல் 2016.12.25ஆம் திகதி வரையில் குறைத்துள்ளதாகவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியை 2014.01.13ஆம் திகதிக்கு முற்திதிகதியிட்டு வழங்குவதற்கும், 2024.01.13ஆம் திகதியில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வுக்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் கோரியுள்ளார். | ஆணைக்குழுவின் NPC/GO/NGO/POL.VIC /6/27/2016ஆம் இலக்கத்தையுடைய 2018.06.19 ஆம் திகதிய கடிதமும் | |
| 03 | ஜனாப் அஹமது ஜான் ரஸூல் ஜான் COM/PP/2025/241 சமர்ப்பித்தவர்: கௌரவ அருண் ஹேமச்சந்திரா, பா.உ. 2025.05.09ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: 02/03/23/30/2017 | பொலிஸ் காவலரணிலிருந்து அனுமதியின்றி 2011.08.24ஆந் திகதி வெளியேறிச் சென்றதாகக் குற்றம் சுமத்தி, போலியாகப் புனையப்பட்ட குற்றமொன்றுடன் தொடர்புபடுத்தி வழக்குத் தாக்கல் செய்து தனது தொழிலை இழக்கச் செய்துள்ளதாகவும் மீளச் சேவையில் அமர்த்துதல், ஒய்வூதியத்தை வழங்குதல் அல்லது பொருத்தமான வேறு நிவாரணத்தை பெற்றுத் தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) மனுதாரர் மீது மோசமான நடத்தை மற்றும் கடமையை புறக்கணித்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள போதிலும், திருகோணமலை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கமைய மனுதாரரின் மோசமான நடத்தை தொடர்பில் அவர் குற்றமற்றவராக அறிவிக்கப்பட்டுள்ளாரென்பது.<br><br>(ஆ) மனுதாரரின் நீண்ட சேவைக் காலப்பகுதியில் மோசமான வேறு சம்பவங்கள் அறியக்கிடைக்கவில்லையென்பது. | மனுதாரரை நிலுவைச் சம்பளமின்றி மீளச் சேவையில் அமர்த்துவதற்கு விதந்துரைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. |
| 04 | திரு. ஆர்.எம். ஜயசுந்தர COM/PP/2025/23 சமர்ப்பித்தவர்: கௌரவ ஈ.எம். பஸ்நாயக்க, பா.உ. 2025.05.09ஆந் திகதி விசாரணை | செய்யாத குற்றத்துக்காக ஒழுக்காற்று அலுவலர் ஒழுக்காற்றுக் கட்டளையொன்றை வழங்கியுள்ளதாகவும் அதற்கமைவாக 04 சம்பள ஏற்றங்களை பிற்போட்டுள்ளதுடன் ரூ. | (அ) ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளும் போது மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பது | சம்பள ஏற்றங்கள் 02 இனை பிற்போடுமாறு வழங்கியுள்ள தண்டனையை நீக்குவதற்கும் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிப்பதற்கும் |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: 01/02/03/21/2023 | 30,000 தொகையை அறவிடுவதற்கு கட்டளை பிறப்பித்துள்ளாரெனவும். மேற்முறையீட்டை தொடர்ந்து தேசிய பொலிஸ் ஆணைக்குழு அதனை 02 சம்பள ஏற்றங்களாக குறைத்துள்ள போதிலும், இதன் காரணமாக 17 வருடங்களாக பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலேயே இருப்பதாகவும் தற்போது நடைமுறையிலுள்ள தண்டனைக் கட்டளையை முழுமையாக அகற்றித் தருமாறும் கோரியுள்ளார். | (ஆ) குறித்த சம்பவம் தொடர்பாக வேறு அலுவலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | குழு விதந்துரைத்துள்ளது. |
| 05 | திருமதி. ஜீ.பீ. தெபுலன்தகே<br>COM/PP/2025/176<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ சந்தன சூரியஆரச்சி, பா.உ.<br>2025.05.09 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: 02/03/23/19/2020 | இரண்டு வருடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறையில் இருந்து பின்னர் மீண்டும் ஒரு வருட சம்பளமற்ற விடுமுறையினை அங்கீகரித்துக்கொண்டதாகவும் 1996.02.15ஆம் திகதி மீண்டும் சேவைக்கு சமூகமளித்த போதிலும் சேவையை விட்டுச் சென்றதான கட்டளை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு அறிவித்துள்ளதாகவும், கடமைக்கு சமூகமளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும், மேன்முறையீட்டுக்கு அமைவாக பகிரங்க சேவைகள் ஆணைக்குழு மீண்டும் சேவையில் அமர்த்தி சம்பள ஏற்றமொன்றை | (அ) மனுதாரர் குறிப்பிட்ட காலப்பகுதியில் தனது வெளிநாட்டு விடுமுறையினை இன்னும் ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிப்பது தொடர்பாக முன்வைத்த கோரிக்கை தொடர்பான சாட்சி ஆவணங்கள்<br><br>(ஆ) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிப்பாளர் – பொதுமக்கள் தொடர்பாடல் மூலமாக சிரேஷ்ட பிரதிப் பொலிசுத் தலைமை அதிபதிபதிக்கு (நிருவாகம்) ஆற்றுப்படுத்திய கடிதம் மற்றும் | (அ) 1995.02.25ஆம் திகதி தொடக்கம் 1996.11.14ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை நிலுவைச் சம்பளமின்றி முனைப்பான சேவைக் காலப்பகுதியாக கருதி செயற்படுத்துவதற்கும்,<br><br>(ஆ) சம்பள ஏற்றமொன்றை பிற்போடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டளையை அகற்றுவதற்கும் குழு விதைந்துரைத்துள்ளது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | பிற்போட்டு தண்டனை வழங்கியதாகவும், அதன் பின்னர் அப்போதைய – ஒழுக்காற்று மற்றும் நடத்தைப் பணிப்பாளர் மூலமாக சம்பள ஏற்றம் 03 இனை நிறுத்துவதற்கு கட்டளை வழங்கியதாகவும், சம்பள ஏற்றம் பிற்போட்டதை அகற்றுமாறும் 1995.02.25ஆம் திகதி தொடக்கம 1996.11.14ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை முனைப்பான சேவைக் காலப்பகுதியாகக் கணிப்பிடுமாறும் கோரி இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக சேவை வெறிதாக்கல் கட்டளை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளமை. (இ) அலுவலக மட்டத்தில் விடுமுறை அங்கீகரிக்கையில் தவறு ஏற்பட்டுள்ளதென்பது. | |
| | **பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு** | | | |
| 06 | திரு. தடல்லகே முனிதாஸ மெண்டிஸ் COM/PP/2025/02 சமர்ப்பித்தவர்: கௌரவ ரவீ கருணாநாயக்க அவர்கள், பா.உ. 2025.02.25ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: HA/05/07/03/30 | நெல் சந்தைப்படுத்தல் சபையில் சேவையாற்றிய தான் உள்ளிட்ட 07 குடும்பங்கள் நெல் சந்தைப்படுத்தல் சபை மூடப்பட்டதை தொடர்ந்து உரிய அனுமதியைப் பெற்று சபைக்குச் சொந்தமான வீடுகளில் சுமார் 30 வருடங்கள் வசித்து வந்ததாகவும், 1972ஆம் ஆண்டு முதல் குறித்த வீடுகளில் வசித்து வந்த தான் உட்பட ஏனைய தரப்பினருக்கு மேற்படி வீடுகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை முறைமையொன்று காணப்படாததால், தான் 2009.06.23ஆம் திகதி பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழுவிற்குச் சமர்ப்பித்த | (அ) அம்பாந்தோட்டை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டபடி, முறையான வழிமுறையின்படி குடியிருப்பாளர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவது பொருத்தமானது என்று காணி ஆணையர் நாயகம் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு அறிவித்துள்ளார். (ஆ) காணி ஆணையாளர் நாயகத்தின் அறிவிப்பின் பேரில், 2008/4 | மனுதாரர் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியுடையோருக்கு வசிப்பதற்கு மாற்றுக் காணிகளை வழங்குமாறு விதந்துரைக்கப்பட்டுள்ளது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | மனுவை, 2015.04.10ஆம் திகதி கூடிய பொது மனுக்கள் பற்றிய குழு விசாரித்தததை தொடர்ந்து, தான் உள்ளிட்ட ஏனைய தரப்பினர் வசிக்கும் வீடுகளை கொண்ட காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நகரத் திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள காரணத்தினால் உள்ளடக்கி இருப்பதால் குறித்த வீடுகள் மற்றும் காணிகளுக்கு பதிலாக நகரத்திற்கு அண்மித்த பிரதேசத்தில் மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தீர்ப்பு வழங்கிய போதிலும், இன்றளவில் நெல் சந்தைப்படுத்தல் சபையானது தனக்கும் ஏனைய தரப்பினருக்கும் வீடுகள் மற்றும் காணிகளின் உரித்தை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதால், குழு வழங்கியுள்ள தீர்மானம் காரணமாக தனக்கும் ஏனைய தரப்பினருக்கும் வீடுகள் மற்றும் காணிகளினது உரித்தைப் பெறுவதற்கு தடை ஏற்பட்டுள்ளதாகவும், அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் மேற்படி குழுவின் தீர்மானம் காரணமாக தனக்கும் ஏனைய தரப்பினர்களுக்குமான வீடுகள் மற்றும் காணிகளின் உரித்தை வழங்க | சுற்றறிக்கையின்படி குடியிருப்பாளர்களின் அடிப்படைத் தகுதிகளை ஆராய்ந்த பின்னர், மாற்று குடியிருப்பு நிலங்களை வழங்குவதற்கு தகுதியான 08 நபர்கள் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், மேலும் மனுதாரரும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்<br>(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 2023.11.08 தேதியிட்ட கடிதத்தில், வணிக மதிப்புள்ள காணி என்பதால், அந்த காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கவும், குடியிருப்பாளர்களுக்கு மாற்று நிலங்களை வழங்கவும் பிரதேச செயலாளருக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளதாகவும், 2015.04.10ஆம் திகதி பொது மனுக்கள் குழு வழங்கிய தீர்ப்பை வலிதற்றதாக்கி செய்து தனக்கும் ஏனைய தரப்பினருக்கும் நிவாரணமொன்றை பெற்றுத் தருமாறும் கோரியுள்ளார். | | |
| 07 | திரு. டபிளியூ. எம்.டபிளியூ.ஜீ.ரீ பண்டார விஜேரத்ன<br>COM/PP/2025/19<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ (திருமதி) ரோஹிணி குமாரி விஜேரத்ன அவர்கள், பா. உ.<br>2025.02.25ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல:<br>PL/COM/PP/2020/25 | மத்திய மாகாண பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் CPC/SPC/28/19/2018 ஆம் இலக்க மற்றும் 2019.11.20ஆம் திகதிய கடிதம் மூலமாக மத்திய மாகாண மோட்டார் வாகன சாரதிகள் சேவையின் III ஆம் தரத்திற்கான (திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம்) தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நியமனக் கடிதம் 2019.11.27ஆம் திகதி வழங்குவதாக அறிவிக்கப்பட்டு, அதன் பின்னர் நியமனக் கடிதம் வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், மாகாண மோட்டார் வாகனச் சாரதிகள் தரம் III இற்கான பதவியைப் பெற்றுத் தருமாறு கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கைகள் 01/2020 மற்றும் 02/2020 அவதானிக்கப்பட்டது.<br>(அ)அரசாங்கம் மேற்கொண்ட கொள்கை ரீதியான தீர்மானமென்பது<br>(இ) குறித்த கொள்கை ரீதியான தீர்மானங்களை எழுத்து மூலமாக உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் எழுத்து மூலமான/<br>பிரயோக ரீதியான மற்றும் நேர்முகப் பரீட்சை மேற்கொள்ளப்பட்டு நியமனம் வழங்குவதற்கான அழைப்புக் கடிதமும் அனுப்பியுள்ளதால் மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பது. | திறந்த அடிப்படையில்மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்களின் போது அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள போதிலும் நியமனம் கிடைக்காத மனுதாரருக்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மத்திய மாகாண பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு விதந்துரைக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 08 | திரு. யூ.டபிளியூ. ஏ. பியசிறி COM/PP/2025/48<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ நிஹால் கலபத்தி பா.உ.<br>2025.02.25ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: PL/613\|COM/PP/201912384 | 1996.03.15ஆம் திகதி தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் பெலியத்த பிரதேச சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதாகவும், 15 வருடங்கள் 03 மாத கால சேவைக் காலத்தின் பின்னர் 2013.01.01ஆம் திகதி சிற்றூழியர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதாகவும், 60 வருடங்கள் பூர்த்தியடைந்ததன் அடிப்படையில் 2017.12.05ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெற்றதாகவும், ஓய்வூதியம் கிடைக்கப் பெறாததால் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறும் கோரியுள்ளார்.<br>. | (அ) அமைய, பதிலீடு மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான சேவைக் காலத்தில் ஊழியர் சேமலாப நிதியம் (EPF) அல்லது அரச சேவை சேமலாப நிதிதியத் (PSPF) இற்குப் பங்களிப்பு செய்துள்ளதால், நிரந்தர சேவையில் உள்ளீர்க்கப்படுகையில் அந்தச் சேவைக் காலத்தையும் கருத்திற்கொள்ளலாம் .<br>(ஆ) அரசாங்கம் மேற்கொடுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்கள் | அரசாங்கத்துக்கு சேவை ஆற்றியுள்ளதை கருத்திற் கொண்டு, அரச ஊழியர்களை ஓய்வூபெறச் செய்யும் சட்டவிதிகளுக்கு முரணாகாத வகையில் ஓய்வூதியத்தை வழங்குவதற்கும் அதற்காள ஏற்பாடுகளைச் செய்யுமாறும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |
| 09 | திருமதி ரசிக்கா விபோதனீ ரைகம் பண்டார COM/PP/2025/37<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ ரத்ன கமகே பா.உ.<br>2025.03.11ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு | தாம், 2012 ஒற்றோபர் மாதம் முதல் களுத்துறை நகர சபையில் முன்பள்ளி பெண் மேற்பார்வையாளராக சேவையில் இணைந்ததுடன், இதுவரையில் 09 வருடங்கள் களுத்துறை நகர சபைக்குரிய முன்பள்ளிகளில் சேவையாற்றி வருவதாகவும், 2013 ஆம் | (அ) 2012ஆம் ஆண்டிலிருந்து நீண்ட காலம் தனது சேவையை முன்பள்ளி ஆசிரியராக களுத்துறை மாநகர சபைக்கு வழங்கியுள்ளமையால்.<br>(ஆ) களுத்துறை நகர சபை ஊழியர்களுக்குள் | மேற்குறித்த பதவிக்குத் தேவையான தகைமைகளை மனுதாரர் பூர்த்தி செய்துள்ளாரா என்பதை உரிய முறையில் பரிசீலித்து, அத்தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரெனில் நிரந்த நியமனம் வழங்குவது |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | இல:IAD/EST/GA15/PP-GNRL 2022 | ஆண்டு மேல் மாகாண முன்பள்ளி சமவாயத்தில் பதிவு செய்யும்போது தன்னையும் தகைமையுள்ள ஆசிரியையாக பதிவு செய்தபோதிலும், தனது சேவையை இதுவரையில் நிரந்தரமாக்கவில்லை எனவும், தனது சேவையை நிரந்தரமாக்கித் தருமாறும் கோரியுள்ளார். | 03 முன்பள்ளி உதவியாளர் பதவிகளுக்கு ஏற்கனவே அந்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. | பொருத்தமானதென விதந்துரைக்கப்பட்டது. |
| 10. | திருமதி கே. பீ. டபிளியூ. ஜீ ஞானலதா COM/PP/2025/54<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ ஜகத் மனுவர்ண பா.உ.<br>2025.03.11ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: Pns/P5/01/94 | விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் W.A.V.Y. F/040574 என்ற எண்ணின் கீழ் நூலக உதவியாளராக அவர் உறுதிப்படுத்தப்பட்டார் மற்றும் 14.09.2007 முதல் கிட்டத்தட்ட 14 ஆண்டுகளாக பங்களிப்புகளைச் சேகரித்தார், மேலும் நிரந்தர நியமனம் பெறும் போது அவருக்கு 45 வயதுக்கு மேல் இருந்தபோதிலும் மாற்றுப் பதவிக்கு நியமிக்கப்படும் போது 39 வயதுடைய நபருக்கு, பறிமுதல் செய்யப்பட்ட ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையை வழங்கக் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 45 வயதை எட்டிய பிறகு நியமிக்கப்பட்ட மாகாண சபைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமைகளை வழங்க 2024 ஆம் ஆண்டு (12 ஆகஸ்ட் 2024 மற்றும் 23 டிசம்பர் 2024) அமைச்சரவையின் முடிவு எடுக்கப்பட்டது, மேற்படி முடிவுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அனைத்து மாகாண தலைமைச் செயலாளர்களுக்கும் 30.12.2024 தேதியிட்ட கடிதம் மூலம் அறிவித்துள்ளார். | அமைச்சவைத் தீர்மானத்துக்கு அமைய, மனுதாரருக்கு தமது ஓய்வூதிய உரித்தைப் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் காணப்படுவதை அமைச்சரவையின் முடிவின்படி, மனுதாரர் தனது ஓய்வூதிய உரிமையைப் பெறுவதற்குத் தேவையான விதிகள் இருப்பதால், அவருக்கு ஓய்வூதிய உரிமை வழங்க பரிந்துரைக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | அதன்படி, மத்திய மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் பட்டியலில் அவரது பெயர் 152வது பெயராக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | |
| 11 | திருமதி எச். எச். சுவர்ணா COM/PP/2025/134<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ (பேராசிரியர்) எல். எம். அபேவிக்ரம பா.உ.<br>2025.03.11ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: PL/6/3/5/com/p/2016/735 | மனுதாரர் தாம் கடையொன்றைத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறிவித்துள்ளதுடன்,<br>அந்தக் கடைக்குத் தேவையான கட்டிடத்துக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளபோதிலும், கிரிந்த, புகுல்வெல்ல பிரதேச சபை தலைவரின் தலையீட்டால் கடைக்குத் தேவையான கட்டிடத்தை அமைப்பதற்கு முடியாமல் போனதாகவும், அரசியல் பழிவாங்கல் மற்றும் தனிப்பட்ட வர்த்தக காரணங்களின் அடிப்படையில் தலைவர் தலையிட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள மனுதாரர் நட்டஈடற்ற ஒப்பந்த அடிப்படையில் கடையை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து தருமாறு கோரியுள்ளார். | (அ) 23.09.2019 அன்று பிரதேச சபையின் தொழில்நுட்ப சேவை அதிகாரி (சிவில்) ஒருவரால் மனுதாரரின் நிலத்தின் நேரடி ஆய்வு நடத்தப்பட்டது, மேலும் அந்த அறிக்கையில் உள்ள அவதானிப்புகள் பின்வருமாறு:<br>(ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபை 2014 ஆம் ஆண்டு அளவுகோல்களின் படி பரிந்துரைத்த போதிலும், மனுதாரரின் நிலம் தற்போதைய அளவுகோல்களுக்கு இணங்கவில்லை, எனவே, அவரது கோரிக்கையின்படி, அந்த நிலத்தில் நிரந்தர கட்டுமானத்திற்கு ஒப்புதல் வழங்கப்படவில்லை. | மனுதாரரான திருமதி எச்.எச். சுவர்ணா அவர்களால் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 12755 இலக்கமுடைய அன்பளிப்பு உறுதி பற்றிய அறிக்கையை வழங்குவதற்கும் மனுதாரருக்கு வியாபார நிலையமொன்றை அமைப்பதற்கு வழங்குவதற்குப் பொருத்தமான காணியொன்று கிரிந்தை புஹுல் வெல்ல பிரதேச செயலாளரின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் கிரிந்தை புஹுல் வெல்ல பிரதேச செயலாளரிடம் அறிக்கையொன்றைக் கோருவதற்கும் அதுவரையில் வீதி அதிகாரசபையினதும் கிரிந்தை புஹுல்வெல்ல பிரதேச சபையினதும் உரிய அங்கீகாரத்துடன் அவரது காணியில் |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | (இ) அந்த நேரத்தல் பீ தர சாலையாக இருந்த மாத்தறை-ஹக்மன சாலையை அகலப்படுத்தும் போது, சாலையின் இருபுறமும் உள்ள நில உரிமையாளர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கப்படவில்லை, மேலும் அவர்களின் எழுத்துப்பூர்வ ஒப்புதலுடன் மேம்பாட்டு நோக்கங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. | நடமாடும் வியாபார தள்ளு வண்டியை (சக்கரங்களுடன்களுடன் கூடிய)வைத்திருப்பதற்கு தற்காலிகமான அனுமதியை வழங்குவதற்கு குழு தீர்மானித்தது. |
| 12 | திரு. ஆரியதாச கொடகம<br>COM/PP/2025/75<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ கயந்த கருணாதிலக பா.உ. 2025.05.20ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: PL/7/4/5/2-2024 | தமது அமைப்பிற்குச் சொந்தமான கட்டிடத்திற்கு அருகாமையில் உள்ள மூன்று නැදුන් ගස් நந்தூண் மரங்கள் மற்றும் எலஸ்டோனியா மரம் காரணமாக தமது கட்டிடத்துக்கும் சொத்துக்களுக்கும் மனித உயிர்களுக்கும் ஆபத்தான நிலைமை காணப்படுவதாகவும், 2019ஆம் ஆண்டு முதல் நாகொட பிரதேச சபைக்கு அறிவித்துள்ளதாகவும், பல்வேறு சந்தர்ப்பங்களில் மரங்களை அகற்றுவதற்கு கட்டளையிடப்பட்டபோதிலும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், 2023.05.23ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் பொலிஸாரின் | (அ) மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு அருகில் 3 நீனு மரங்களும் ஒரு உயரமான அலஸ்டோனியா (விறகு) மரமும் இருப்பதற்கான சான்றுகள் உள்ளன.<br>(ஆ) காலி நாகொட பிரதேச சபையின் செயலாளர் 09.05.2025 அன்று ஒரு நேரடி ஆய்வில் பங்கேற்றார்.<br>(இ) மூத்த குடிமக்கள் அமைப்புக்குச் சொந்தமான கட்டிடம் பிரதேச சபையின் முறையான ஒப்புதலுடன் கட்டப்படவில்லை | (அ) தற்போது அங்கீகரிக்கப்படாத கட்டிடமாக இயங்கி வரும் 'மெத்த' மூத்த குடிமக்கள் அமைப்புக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு காலி நாகொட பிரதேச சபையிடமிருந்து முறையான அங்கீகாரத்தைப் பெற உடனடி நடவடிக்கை எடுத்து, இரண்டு (02) மாதங்களுக்குள் பிரதேச சபைக்கு தொடர்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.<br>(ஆ) பிரதேச சபை செயலாளரால் செய்யப்பட்ட |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | உதவியுடன் அந்த மரங்களை அகற்றுவதற்கு ஆலோசனை வழங்கியுள்ள போதிலும் அது நடைமுறைபடுத்தப்படவில்லை என்பதால் உரிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்தித் தருமாறு கோரியுள்ளார். | என்பது.<br><br>(ஈ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 107 (1) இன் மூலம் ஆபத்தான மரங்களை வெட்டி அகற்றுவதற்குத் தேவையான அதிகாரங்கள் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளன, ஆனால் மனுதாரர் அந்த நோக்கத்திற்காக ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் | அறிவிப்பின்படி, கட்டிடத்திற்கு அருகிலுள்ள மரங்களை வெட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்<br>(இ) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான பிரதேச சபையின் ஒப்புதலைப் பெறுவதற்காக, மனுதாரர் காலி நாகொட பிரதேச சபையின் செயலாளரிடம் தொடர்புடைய விண்ணப்பத்தை சமர்ப்பித்தவுடன் உடனடியாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க,<br>(ஈ) மரங்களை வெட்டி அகற்றுவதற்கான விண்ணப்பத்தை மனுதாரர் சமர்ப்பித்த பிறகு எடுக்க வேண்டிய தேவையான நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி செயல்படுத்துதல்.<br>(உ) ஒரு மூத்த குடிமக்கள் அமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த மனு தொடர்பாக குழுவால் செய்யப்பட்ட பரிந்துரைகள்/நிவாரணங்களை முன்னுரிமை அளித்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | | சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மேலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 13 | திரு.பி.ஏ.ஜி.பெரேரா<br>COM/PP/2025/08<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ, பா.உ.<br>2025.02.25 மற்றும் 2025.04.10 ஆகிய திகதிகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>විබ/පා/12/පෙත්සම්/2019-02 | தான் 20 வருடங்களில் இரு தடவைகள் மின்சார சபையில் பணியாற்றியதுடன், 2015.11.30 ஆந் திகதி ஓய்வு பெற்றதாகவும், தனக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு கிடைக்கவில்லை எனவும், நிகரான தகுதியுடையோர் ஓய்வூதியக் கொடுப்பனவினைப் பெறும்போது, தனக்கு ஓய்வூதியம் கிடைக்காதது நியாயமற்றது ஆகையால், ஓய்வூதியக் கொடுப்பனவைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | இலங்கை மின்சார வாரிய ஊழியர்களின் சார்பாக, 14 முதல் 20 வரையிலான தொடர் எண்களைக் கொண்ட பின்வரும் கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>(அ) பல ஆண்டுகளாக நாடாளுமன்ற மனுக்கள் குழுவால் செய்யப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான முன்னுதாரணங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை மின்சார வாரியத்தில் முன்னர் பணியாற்றிய பிற ஊழியர்களுக்கும் இதே போன்ற நிபந்தனைகளின் கீழ் ஓய்வூதிய உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதால், ஒரு அமைச்சரவை அறிக்கை சமர்ப்பிது இந்த மனுதாரர்களுக்கும் ஓய்வூதிய | இலங்கை மின்சார வாரிய ஊழியர்களின் சார்பாக, 13 முதல் 20 வரையிலான வரிசை எண்களைக் கொண்ட பின்வரும் பரிந்துரைகளை குழு வழங்குகிறது:<br><br>(அ) சேவைக் காலம் துண்டு துண்டாக இருந்தாலும், மொத்த சேவைக் காலம் 240 மாதங்களுக்கும் மேலாகவும், தற்போது ஓய்வூதியம் பெறாத ஏழு (07) மனுதாரர்களின் சார்பாக, ஓய்வூதிய உரிமையை வழங்க மின்சார சபை இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலுடன் வ்லுசக்தி அமைச்சகத்தின் செயலாளரிடம் கோரிக்கை வைத்து அமைச்சரவைப் பத்திரம் மூலம் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது. இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தொடர்பாக எதிர்காலத்தில் |
| 14 | திரு.எட்வேட் ஜேன்ஸ்<br>COM/PP/2025/13<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ திருமதி ஸ்டெபனி பெர்னாந்து, பா.உ.<br>2025.03.19 மற்றும் 2025.04.10 ஆகிய திகதிகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>විබ/පා/6/පෙත්සම්-2020-02 | சேவைக் காலங்கள் இரண்டினையும் ஒன்றிணைக்கும்போது 26 வருடங்களை விட விஞ்சிய சேவைக்காலமொன்று பூர்த்தியாவதாக குறிப்பிடும் மனுதாரர் சேவைக் காலங்களை ஒன்றிணைத்து ஓய்வூதியம் செலுத்தப்படும் வாய்ப்புக்களுக்கான முன்மாதிரிகள் காணப்படுவதனால் தனக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவைப் | | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | பெற்றுத்தருமாறு கோரியுள்ளார். | உரிமைகளை வழங்குமாறு இலங்கை மின்சார வாரியத் தலைவருக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதெனவும்.<br><br>(ஆ) அந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த ஒப்புதல் பெறுவதற்காக வாரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், இந்தப் பரிந்துரை இலங்கை மின்சார சபையின் ஒய்வூதிய விதிமுறைகளுக்கு முரணானது என்பதால் இயக்குநர்கள் குழு அதைச் செயல்படுத்த மறுத்துவிட்டது.<br><br>(இ) மனுதாரர்கள் தொடர்பாக சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படும் கொள்கை மீறப்பட்டுள்ளது மற்றும் ஒரே கோரிக்கை தொடர்பாக வெவ்வேறு ஊழியர்கள் வித்தியாசமாக நடத்தப்பட்டுள்ளனர். | இதுபோன்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மேலும், சட்டமா அதிபரின் அறிவுரையுடன் தேவையான விதிகளைச் சேர்க்க வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது. |
| 15 | திரு .எம்.கே. ஆரியரத்ன<br>COM/PP/2025/35 | மனுதாரர் 1978 ஆம் ஆண்டு அலுவலக ஊழியராக இலங்கை | | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | சமர்ப்பித்தவர்;<br>கௌரவ ரத்ன கமகே, பா.உ.<br>2025.03.19 மற்றும் 2025.04.10 ஆகிய திகதிகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>විබ/පාලන/6/පෙත්සම්/18-15 | மின்சார சபையில் சேவையில் இணைந்து கொண்டதோடு, 8 வருடங்களும் 8 மாதங்களும் சேவையில் ஈடுபட்ட பின்னர் அரசியல் காரணங்களால் சேவையிலிருந்து பதவி விலகியதாகவும் பின்னர் அரசியல் பழிவாங்கல்கள் பற்றிய குழுவின் விதப்புரையின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டு மீள பணியில் அமர்த்தப்பட்டதோடு, 60 வயது பூர்த்தி ஆகியமையால், ஓய்வு பெற்றதாகவும் ஓய்வூதியம் பெறத்<br><br>தேவையான சேவைக்காலத்தை கணக்கிடும்போது தொடர்புடைய இரு சேவைக்காலங்களும் கணக்கிடப்படாமையினால் தனக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடும் மனுதாரர் தனக்கு ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | | |
| 16 | திரு. டப்ளியூ.டீ. விக்கிரமநாயக்க<br>COM/PP/2025/122<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய, பா.உ.<br>2025.04.10 ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்; | 2003 ஆம் ஆண்டு தான் ஓய்வு பெற்றதாகவும் அதுவரையில் தனக்கு அண்ணளவாக 30 வருட சேவைக்காலம் இருந்தாலும் இதுவரையிலும் தனக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டு மனுதாரர் தனக்குரிய ஓய்வூதியக் | | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | විබ/පාලන/12/පෙත්සම්/2019-05 | கொடுப்பனவைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | | |
| 17 | திரு.கே. எஸ்.அதுல COM/PP/2025/125 சமர்ப்பித்தவர்; கௌரவ தேவானந்த சுரவீர, பா.உ. 2025.03.19 மற்றும் 2025.04.10 ஆகிய திகதிகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; විබ/පා/12/පෙත්සම්-2021-03 | அவர் 60 வயதை எட்டிய பிறகு இலங்கை மின்சார வாரியத்திலிருந்து ஓய்வு பெற்றார், மேலும் அவரது ஓய்வூதிய உரிமையைப் பெற 20 வருட சேவையை நிறைவு செய்ததில் இருந்து 13 நாட்கள் தாமதமாகிவிட்டன. . | | |
| 18 | திருமதி.கே. ஆர்.பீ.தூல்வல COM/PP/2025/143 சமர்ப்பித்தவர்; கௌரவ அசித நிரோஷன எகொட வித்தான , பா.உ. 2025.03.19 மற்றும் 2025.04.10 ஆகிய திகதிகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; විබ/පාලන/6/පෙත්සම්/2018-08 | தான் 1985.03.11 ஆந் திகதி இலங்கை மினசார சபையில் இணைந்து கடமை ஆற்றியதாகவும் 2008 ஆம் ஆண்டு சேவையிலிருந்து விலகியதாகவும் மீண்டும் இலங்கைக்கு வந்து சேவையில் அமர்த்துமாறு மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டினை கருத்திற்கொண்ட இலங்கை மின்சார சபை 2010 ஆம் ஆண்டு புதிய நியமனமாக சேவையை வழங்கியதாகவும் தன்னை மீள பணியில் அமர்த்தும்போது தான் முன்னர் வகித்த தரத்தினையும் ஓய்வூதிய உரித்தினையும் பெற்றுத்தருமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை | | |
| 19 | திரு. பி.டீ.குணசேகர | 2010.10.17 ஆந் திகதி மின்சார அத்தியட்சகர் | | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | COM/PP/2025/292 சமர்ப்பித்தவர்; கௌரவ அசித நிரோஷன எகொட வித்தான , பா.உ. 2025.04.10 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; විබ/පාලන/6/පෙත්සම්/31 | சேவையிலிருந்து ஓய்வுப் பெற்ற தான் 1985.04.01 ஆந் திகதியிலிருந்து 21 வருடங்களான முழுமையான முனைப்பான சேவைக் காலத்திற்காக ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு விண்ணப்பித்தாலும் தனது ஆரம்ப காலத்திற்குரிய கோவையினைத் தேடி அறிய முடியாது போனதாக கூறி மின்சார சபை தனது ஓய்வூதியத்தை இழக்கச் செய்துள்ளதாகவும் குறிப்பிடும் மனுதாரர், கோப்புக்கள் தொடர்பான பொறுப்பு மின்சார சபைக்குரியது என்றும் அவ்வாறு சேவைக் காலத்தை ஒன்றிணைத்து<br><br>ஓய்வூதியம் வழங்கப்பட்டதற்கான முன்மாதிரிகள் காணப்படுவதனையும் கருத்திற்கொண்டு தான் ஓய்வுப்பெற்ற திகதியிலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் நிலுவைத் தொகையைப் பெற்றுத்தருமாறும் அதற்கு நிகரான பிற கொடுப்பனவுகள் காணப்படின் அவற்றையும் பெற்றுத் தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | |
| **கல்வி, உயர்கல்வி,தொழிற்கல்வி அமைச்சு** | | | | |
| 20 | திரு. எச்.பீ. வீ. குவின்டன் ஜோர்ஜ் COM/PP/2025/51 சமர்ப்பித்தவர்; கௌரவ அஜித் | பட்டப்படிப்பு தகைமையின் அடிப்படையில் 2008/31 இலக்கமுடைய சுற்றுநிருபத்தில் | (அ) அழகியல் கல்வி நிறுவனம் , அழகியற்கலைகள் பல்கலைக்கழக | பட்டதாரி சம்பள படி நிலையில் அமர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | அகலகட, பா.உ. 2025.03.03 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; ED/02/29/03/02/429 | குறிப்பிடப்பட்டுள்ளவாறு விடுவிக்கப்பட்ட ஆசிரியராக கருதி பட்டதாரி சம்பளப் படிநிலையில் வைப்பதற்கு முடியுமாக இருப்பதனால் தனது தகைமையின் அடிப்படையில் பட்டதாரி சம்பளப் படிநிலையில் வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிவாரணம் கோரப்பட்டுள்ளது. | மாக 2005.07.01 ஆந் திகதி மாற்றப்பட்டதாகவும், அழகியல் கல்வி நிறுவனமாக இருந்த காலப்பகுதியில் இருந்த சிக்கல் நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தினால் கால வரையறையின்றி எந்தவொரு காலப்பகுதியிலும் சித்தியெய்தாத பாடங்களுக்கு தோன்றுவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்த தாகவும்<br><br>(ஆ) மனுதாரர் உள்வாரி மாணவராக இறுதியாண்டில் தான் தோன்றாத பாடங்களுக்கு மாத்திரம் 2005 ஆம் ஆண்டு தோன்றி, தனது உள்வாரி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துள்ளமையாலும் ஆசிரியர் சேவைக்கு தடையேதும் ஏற்படாத வகையில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துள்ளமையினாலும் | மேற்கொள்ளுமாறு விதந்துரைக்கப்பட்டுள்ளது. |
| **கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு** | | | | |
| 21 | திரு.எம்.ஜீ.சீ.ஹர்ஷன் விஜேரத்ன | காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் | (அ) திவுல்கஸ்கொட்டு | அமைச்சின் செயலாளர், காணி |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | COM/PP/2025/16 சமர்ப்பித்தவர்; கௌரவ ரோஹிணி குமாரி விஜேரத்ன, பா.உ. 2025.02.25 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; 2/15/27/204 | மமா/க/திவுல்கஸ்கொட்டுவ ஆரம்ப பாடசாலையை நடாத்திச் செல்வதற்காக 02 ஏக்கர் அளவான காணியபனது 1980 ஆம் ஆண்டு கல்வித் திணைக்களத்திற்கு சம்பவக் குறிப்பொன்று இடப்பட்டு வழங்கப்பட்டிருப்பினும் அது சட்டரீதியாக வழங்கப்படவில்லை எனவும், பாடசாலைக் காணியின் அளவு நாளுக்கு நாள் குறைவடைவதனாலும் சட்டரீதியாகப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து அதனுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் விழிப்புணர்வு செய்திருப்பினும் மத்திய மாகாண விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பீட்டு அறிக்கையொன்றை வழங்காமையினாலும் முன்மொழியப்பட்ட காணி, காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவிற்கு சொந்தமானது ஆகையால், அந்த ஆணைக்குழுவின் ஊடாக காணியை அளந்து, நில அளவை வரைப்படம் மற்றும் உறுதியொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. | வ ஆரம்பப் பள்ளியின் அதிபருக்கு, தொடர்புடைய காணியைக் கையகப்படுத்துவதற்கான முன்மொழிவை, வரி அமைச்சின் மூலம் காணி அமைச்சுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஆ) நிலத்தை கையகப்படுத்துவதற்கான திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், இதுவரை எந்த கூடுதல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.<br><br>(இ) மாகாண சபை நில சீர்திருத்த ஆணையத்திற்கு செலுத்த போதுமான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.<br><br>(ஈ) அரசாங்க நிறுவனங்களுக்கிடையேயான தொடர்பு இல்லாததால் இந்தப் பிரச்சினை 40 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் உள்ளது, மேலும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக தொடர்புடைய ஒப்படைப்பு | சீர்திருத்த ஆணையத்தின் செயலாளர், மத்திய மாகாண கல்வித் துறை செயலாளர், மத்திய மாகாணத்தின் மாகாண காணி ஆணையர், கலேவெல பிரதேச செயலாளர், கலேவெல வலயக் கல்விப் பணிப்பாளர், திவுல்கஸ்கொட்டுவ ஆரம்பப் பள்ளியின் அதிபர் மற்றும் அந்தப் பள்ளியின் பள்ளி மேம்பாட்டுச் சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலேவெல பிரதேச செயலாளரின் தலையீட்டின் பேரில் கலந்துரையாடல்களுக்குப் பிறகு நில சீர்திருத்த ஆணையத்திற்குச் சொந்தமான இந்தக் காணி, திவுல்கஸ் கொட்டுவ தொடக்கப்பள்ளியைக் கையகப் படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை முடித்து இறுதி செய்ய பரிந்துரைக் கப்பட்டது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| 22 | திரு.ஆர்.கே.கே.ஏ.நந்தசிறி COM/PP/2025/45 சமர்ப்பித்தவர்; கௌரவ நிஹால் கலப்பத்தி, பா.உ. 2025.03.06 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்;MOI/AD/05/04 Public petition (1-2022) | தனது தாயின் இறப்பினால் தனக்கு பரவகும்புக பிரதேசத்தில் உரிமப்பத்திரத்துடனான 01 ஏக்கர் காணி கிடைத்ததாகவும், அதற்கு அருகாமையிலுள்ள காணியும் தனது பெற்றோரால் குடும்ப உறுப்பினர்களுக்கு சரியான முறையில் பிரிவிட்டு வழங்கப்பட்டிருப்பினும் மகாவலி அதிகார சபையின் அலுவலர்கள் இந்த காணிகள் அவர்களுடையது என்று கூறி அவர்களது தற்றுணிவின் பேரில் அளந்து வழங்கப்பட்டமையால் தான் இருப்பாட்சி கொண்டுள்ள காணியை சரியான முறையில் அனுபவிக்க முடியாமல் இருப்பதாகக் குறிப்பிடும் மனுதாரர் இதற்கான நியாயமான ஒரு தீர்மானத்தைப் பெற்றுத் தருமாறு கோரியிள்ளார். | 2023.6.20 ஆம் திகதிய பொது மனுக் குழுவில் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மகாவலி அதிகாரபை அதிகாரிகளினால் முன் வைக்கப்பட்ட விடயங்கள். | 2023.06.20 ஆந் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவில் வழங்கப்பட்ட விதப்புரைகளுக்கு ஏற்றவாறு செயற்பட்டு, மனுதாரருக்குரிய 67 பர்ச் காணிக்கு 02 மாதக் காலப்பகுதிக்குள் அளவை நட வடிக்கைகளை மேற்கொண்டு உரிமப்பத்திரத்தை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. |
| 23 | திரு.எச்.எம்.ஹேரத் பண்டார COM/PP/2025/10 சமர்ப்பித்தவர்; கௌரவ கோசல நுவன் ஜயவீர, பா.உ. 2025.03.06 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; | தனது தந்தைக்கு திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் கல்மெட்டியாய கிராமத்தில் 02 ஏக்கர் மேட்டு நிலக்காணியும், 03 ஏக்கர் வயற்காணியும் இருந்ததாகவும், யுத்த காலத்தில் அந்த பிரதேசத்தில் வாழ | 2022.03.08திகதி நடைபெற்ற பொது மனுக் குழுவில் வழங்கப்பட்ட விதப்புரை | 2022.03.08 ஆந் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவில் வழங்கப்பட்ட விதப்புரைகளுக்கு ஏற்றவாறு செயற்பட்டு , மனுதாரருக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 01 ஏக்கர் 140 பர்ச் அளவைக் கொண்ட மேட்டு நிலக் |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | முடியாதால் தாம் வசிந்த வீட்டைக் கைவிட்டு அவிசாவளைப் பிரதேசத்திற்கு தனது பெற்றோருடன் வதியச் சென்றதாகவும், யுத்தம் முடிவுற்ற பின்னர் தனக்குரிய கல்மெட்டியாய கிராமத்தில் இருக்கும் காணியில் வசிப்பதற்குச் செல்வதற்காக தம்பலகாமம் பிரதேச செயலாளரிடம் எழுத்து மூலமாக அனுமதி கோரியதாகவும், ஆனால், கிழக்கு மாகாண உதவிக் காணி ஆணையாளர் தனக்குரிய காணியைத் தடை செய்துள்ளதாகவும், அந்த காணியின் உடைமையை பிரிதொரு நபருக்கு அளித்துள்ளதோடு, அவர்களால் அந்த காணிப் பயன்படுத்தப்படுவதாகவும் கூறும் மனுதாரர், தனது தகப்பனிடம் இருந்து கிடைத்த காணிகளை தனக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | | காணியையும் 01 ஏக்கர் அளவைக் கொண்ட வயற்காணியையும் துரிதமாக மனுதாரருக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தம்பலகாமம் பிரதேச செயலாளருக்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. |
| 24 | திரு.எம்.பீ.குணரத்ன<br>COM/PP/2025/57<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ ஜே.சீ.அலவத்துவல, பா.உ.<br>2025.03.06 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்; | தான் மாவத்தகம கமநல சேவைகள் சங்கத்தில் அமைய ஊழியர் பதவிக்கு 1985.06.10 ஆந் திகதி நியமிக்கப்பட்டதாகவும், 2014.10.24 திகதி முதல் ஊழியர் (தரம் III) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதாகவும், அமைய அடிப்படையில் கடமையாற்றிய காலப்பகுதியை | (அ) இது தொடர்பாக 22.08.2023 அன்று நடைபெற்ற பொது மனுக்கள் குழுவின் பரிந்துரைகள்<br>(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இன் கீழ் நிரந்தர ஓய்வூதிய அந்தஸ்து வழங்குவது | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சில் இந்த நிலைமையை எதிர்கொள்ளும் ஏராளமான ஊழியர்கள் இருப்பதால் அந்த அனைத்து ஊழியர்களுக்கும் ஏற்பானதாக, அவர்களது அமைய |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | கருத்திற்கொள்ளாது நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருப்பதனால், ஓய்வூதியக் கொடுப்பனவினை இழந்திருப்பதாகவும், இது தொடர்பாக பாராளுமன்றத்திற்கு மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டு, விதப்புரை வழங்கப்பட்டிருப்பினும் அந்த விதப்புரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று குறிப்பிடும் மனுதாரர் இது தொடர்பாக கரிசனையோடு கவனம் செலுத்தி தனக்கு ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | செய்யப்பட்டிருந்தாலும், இந்த ஊழியர்கள் குழு சுற்றறிக்கை 25/2014 இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவை வகைகளைச் சேர்ந்தவை அல்ல.<br>(இ) இந்த சூழ்நிலையை எதிர்கொள்ளும் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்களின் இருப்பு | அடிப்படையிலான முன்னைய சேவைக் காலத்தைச் சேர்த்து ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதற்காக அமைச்சரவை அனுமதியினை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றைத் தயாரித்து அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு விதந்துரைக்கப்பட்டது. |
| 25 | திரு.ஜீ.எல் பியசேன<br>COM/PP/2025/25<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ, பா.உ<br>2025.03.06 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்; | தந்தை வழி உரித்தினால் தனக்கு கிடைத்த எவ்.வி.பி. 109 மீகஹதென்ன எனும் அரச காணியின் பிரிவொன்று, அதன் அருகாமையிலுள்ள காணி உரிமையாளர்களுக்கு நியாயமற்ற முறையில் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால், நியாயமான விசாரணையொன்றினை நடாத்தி அந்த முழுமையான காணியை தனக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. | (அ) பிரேமாவதி கன்னங்கராவுக்குச் சொந்தமான அருகிலுள்ள நிலத்தை அளவீடு செய்து மீதமுள்ள நிலம் குறித்த அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்க 10.11.2022 அன்று நடைபெற்ற பொது மனுக்கள் குழுவின் கூட்டத்தில் பெறப்பட்ட பரிந்துரையின்படி நடத்தப்பட்ட நில அளவீடு குறித்த அறிக்கை.<br>(ஆ) பகுதி B எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் அங்கீகரிக்கப்ப | அனுமதியின்றி இருப்பாட்சி கொண்டுள்ள 33.6 பர்ச் அளவைக் கொண்ட “பி” பகுதி அரசாங்கம் (பிரதேச செயலாளருக்கு) கையகப்படுத்தி கொண்டு கொள்முதல் விலையின் பிரகாரம் மனுதாரருக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலல்லாவிட்ட பிரதேச செயலாளருக்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | டாத உபயோகத்தின் கீழ் உள்ளது. | |
| 26 | திரு.எஸ்.ஏ.எம். நிலாம் COM/PP/2025/38 சமர்ப்பித்தவர்; கௌரவ முனீர் முலாபர், பா.உ. 2025.03.06 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; | தான் நில அளவை திணைக்களத்தில் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு 06 வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னர், அது முறையற்ற நியமனம் என்று கூறி அக்காலப்பகுதியில் தன்னால் ஈட்டப்பட்ட சம்பளத்தை மீள அரசாங்கத்திற்கு அறவிட்டுக் கொண்டதாகவும், , அதற்கான நீதியை நிலைநாட்டுமாறு கோரி 9ஆவது பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு அனுப்பப்பட்ட மனுவினை விசாரித்து தனக்கு நிவாரணம் வழங்குவதற்காக நில அளவைத் திணைக்களத்தினால் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் இது வரையிலும் தீர்வொன்று கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டிருக்கும் மனுதாரர் தன்னிடமிருந்து அறவிட்டுக்கொண்ட நிதி மற்றும் சம்பந்தப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுத் தருமாறு கோரியுள்ளார். | 2024ஜூன் 05, அன்று நடைபெற்ற பொது மனுக்கள் குழு கூட்டத்தில் விசாரணையைத் தொடர்ந்து, மனுதாரரை மீண்டும் பணியில் அமர்த்துவதன் மூலம் செய்யப்பட்ட நியமனத்தை முறைப்படுத்த அமைச்சரவைப் பத்திரம் மூலம் ஒப்புதல் பெறப்படும், மேற்கூறிய ஒப்புதலுக்கு இணங்க, அவரது முழு சேவை காலத்திற்கும் உரிய முழு ஓய்வூதியத்தையும் பெற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். பரிந்துரையின்படி ஒரு அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு, அமைச்சரின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர். | கமத்தொழில், கால்நடை வளங்கள் , காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் தற்போது வரையப்பட்டுள்ள அமைச்ச வைப் பத்திரத்தை தவறாது அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சரவைத் தீர்மானம் எட்டப்பட்ட பின்னர் அது தொடர்பான அறிக்கையொன்றை குழுவிற்கு அனுப்புமாறும் கமத்தொழில், கால்நடை வளங்கள் , காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. |
| **சுகாதார அமைச்சு** | | | | |
| 27 | திரு. என்.ஜீ. பிரேமசந்திர | மனுதாரர்கள் களுத்துறை மருந்தாளர் | (அ) நிர்வாகத்திற்கா | 1994ஆம் ஆண்டில் சேவையில் |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | OMB/P/2/4/5483/2023 மனுதாரரால் நிருவாக அலுவல்களுக்கான பாராளுமன்ற ஆணையாள (ஒம்புட்ஸ்மன்) ருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.03.11ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. | கல்லூரியில் கடமையாற்றி தற்போது ஓய்வுப் பெற்றுள்ளதாகவும், சுகாதார அமைச்சின் செயலாளரது TA/TUT/GEN/PSM & PARA/II/20180ஆம் இலக்க மற்றும் 2020.03.12ஆந் திகதிய கடிதமூலம் மூப்புரிமையில் குறைந்த பெண் அலுவலர் ஒருவருக்கு பதவி உயர்வை பிற்திகதியிட்டு, அதாவது மருந்தாளர் கலாநிதி பதவி வழங்கப்பட்டுள்ளதால் தனது மூப்புரிமை பாதிக்கப்பட்டுள்ளதாக வும், அதனால் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள தோடு, அதனால் தனக்கு கடந்த காலத்திற்கு ஏற்பான விதத்தில் பதவி உயர்வை பிற்திகதியிட்டு வழங்கி மூப்புரிமைக்கு ஏற்பட்ட அநீதியை நீக்கி நிலுவைச் சம்பளத்தைச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) இற்கு 2023.06.15ஆந் திகதி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பாராளுமன்ற ஆணையரால் (ஒம்பூட்ஸ்மன்) குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை<br><br>(ஆ) 1994 இல் சேவையில் சேர்ந்த திருமதி. யு.டி.ஜே. பெரேரா, 2002 இல் தரம் I க்கு பதவி உயர்வு பெற்றார் எனவும் பின்னர், அது 1994 வரை ஒத்திவைக்கப்பட்டது மற்றும் நிலுவைத் தொகை செலுத்தப்பட்டது, இதனால் அவர் களுத்துறை மருந்தக மனையில் சேர்ந்து சேவை மூப்பை உடைய மனுதாரர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக குழு கருதுகிறது. | இணைந்து கொண்ட திருமதி. யூ.டீ.ஜே. பெரேராவுக்கு 2002 ஆம் ஆண்டில் தரம் I இற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதுடன், பின்னர் அது 1994ஆம் ஆண்டுவரை பிற்திகதி இடப்பட்டு நிலுவைச் சம்பளமும் செலுத்தப்பட்டுள்ளதால் அவருக்கு முன்னதாக களுத்துறை மருந்தாளர் கல்லூரியில் சேவையில் இணைந்து மூப்புரிமையில் மேல் மட்டத்தில் இருந்த மனுதாரர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதை குழு அவதானித்தது. |
| 28 | திருமதி. டீ.என். கொட்டஹச்சி OMB/P/2/4/5483/2023 மனுதாரரால் நிருவாக அலுவல்களுக்கான பாராளுமன்ற ஆணையாள (ஒம்புட்ஸ்மன்) ருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.03.11ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. | | | |
| 29 | திரு. எம். பியதிஸ்ஸ COM/PP/2025/89 சமர்ப்பித்தவர்: கௌரவ சதுர கலப்பத்தி, பா.உ. 2025.04.10. அமைச்சின் தொடர்பு இல: MH/AD/01/06/01/07/201 | தாள் 1997ஆம் ஆண்டு பதவி ஸ்ரீபுர கிராமிய வைத்தியசாலையில் தொழிலாளியாக கடமை புரிந்ததாகவும் அப்போது ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மேற்கொண்ட பொதுத் தீர்மானத்திற்கு இணங்க தன்னுடைய தொழில் | (அ) 1977 பொதுத் தேர்தலுக்குப் பிறகு அரசியல் காரணங்களால் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அமைச்சரவை | அமைச்சரவைத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படாததால் மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து, அதற்கு இணங்க மனுதாரருக்கு நியாயமான ஒரு |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | 7 | இழக்கச் செய்யப்பட்டதாகவும், 1995ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பதவி உயர்வுடன் சேவை காலத்தையும் கருத்தில் கொண்டு பாராளுமன்ற அங்கீகாரத்தின் மூலம் மீண்டும் தொழிலில் அமர்த்திய போதும், இதுவரை அந்தத் தொழில் கிடைக்கவில்லை எனவும் தனக்கு நியாயமான ஒரு இழப்பீட்டுத் தொகையை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் கோரி உள்ளார். | முடிவுகளின்படி (எண்/AMA/96/0965 /120/088 மற்றும் 1996.06.05 தேதியிட்டது) மனுதாரரை 11.08.1977 முதல் சம்பள நிலுவைத் தொகை இல்லாமல் மீண்டும் பணியில் சேர்க்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.<br><br>(ஆ) அமைச்சரவை முடிவை அமல்படுத்தாததால் மனுதாரர் வருத்தமடைந்துள்ளார்.<br><br>(இ) டிசம்பர் 07, 2021 அன்று இந்த மனுவை விசாரித்த பின்னர் பொது மனுக்கள் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல் செயல்படுத்தப்படவில்லை | இழப்பீட்டுத் தொகையை வழங்குவது பொருத்தம் என விதப்புரை வழங்கப்பட்டது. அதன்படி, மனுதாரருக்கு நியாயமான ஒரு இழப்பீட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநருக்கு அறிவிக்குமாறும், கிழக்கு மாகாண அரச சேவை ஆணைக்குழு மற்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு போன்ற தரப்பினர் இதுகுறித்து செயல்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது. |
| **பாதுகாப்பு அமைச்சு** | | | | |
| 30 | திருமதி ஆர்.கே. அசோகா ரஞ்ஜனி COM/PP/2025/133<br>சமர்ப்பித்தவர்: கௌரவ அஜித். பீ. பெரேரா பா.உ.<br>2025.03.14 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: MOD/DEF/GS/PPC/SLA /58 | தனது கணவர் இலங்கை இராணுவத்தில் 15 ஆண்டுகள் பணிபுரிந்து 2002ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றதாகவும், சுகவீனம் காரணமாக 2005.06.22 திகதி மரணித்ததாகவும், அவருக்கு உரித்தான விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தபோதும் உரிய காலம் கடந்த பின்னர் | (அ) மனு முன்பு 30.11.2021 அன்று பரிசீலிக்கப்பட்டது.<br><br>(ஆ) முப்படைகளின் கோரிக்கைகளுக்கு மேலதிகமாக, மேலே குறிப்பிட்டபடி தாமதமாக பிற அமைச்சகங்கள் மற்றும் துறைகளிடமிருந்து விண்ணப்பங்கள் | விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு விருப்பம் தெரிவித்து இன்றளவில் மரணித்துள்ள முப்படையினர் அடங்கலாக ஏனைய அனைத்து அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் பணிபுரிந்துள்ள அரசு |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | ஆவணங்களைச் சமர்ப்பித்தால் ஒய்வூதிய உரித்து கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கும் மனுதாரர் இந்த விடயத்தை கருணை அடிப்படையில் கவனத்தில்கொண்டு தனது கணவருக்கு உரித்தான ஒய்வூதியத்தைப் பெற்றுத்தருமாறு கோரி உள்ளார். | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், அந்தக் கோரிக்கைகளும் இதில் சேர்க்கப்பட வேண்டும், மேலும் அந்தத் தகவல்களை சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகளிடமிருந்து பெற வேண்டும். | அலுவலர்களின் வாழ்க்கை துணைவர்களுக்கு ஓய்வூதிய உரித்தை வழங்கும்போது, ஓய்வூதிய உரித்தைப் பெற்றுக்கொள்ள உரிய திகதியின் பின்னர் தாமதித்து விண்ணப்பம் செய்துள்ள விதவைகள் மற்றும் தபுதாரர்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு மாத்திரம் ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்கு ஏற்புடையதாக கொள்கை தீர்மானம் மேற்கொண்டு அவர்களுக்கு விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்தைச் செலுத்த அமைச்சரவை பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு விதப்புரை வழங்கப்பட்டது. |
| 31 | திரு. டப்ளியூ. ஏ. சந்திரசோம COM/PP/2025/179 சமர்ப்பித்தவர்: கௌரவ தயாசிறி ஜயசேகர பா.உ. 025.03.14 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட் | தான் 1996.12.05ஆந் திகதி இலங்கை கடற்படையில் பதிலீட்டுத் தொழிலாளியாக கடமையில் இணைந்ததாகவும், அண்ணளவாக ஒன்பது வருடங்கள் அந்தப் | (அ) இலங்கை கடற்படையின் சிவில் நிர்வாக இயக்குநரகத்திற்கு சாதாரண/ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு 45 வயதுக்குப் | இலங்கை கடற்படையின் சிவில் நிருவாக பணிப்பாளர் சபைக்கு அமைய / ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்து 45 வயதின் |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | டது. அமைச்சின் தொடர்பு இல: MOD/ PAC/05/PPC/2022/20 | பதவியில் கடமையாற்றிய பின்னர் 2005.05.01ஆந் திகதி பதவி நிரந்தரமாக்கப்பட்டதாகவும், 60 வயது பூர்த்தியாகும் வரை, பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட பின்னர் 14 ஆண்டுகள் மற்றும் பூரண சேவைக் காலமாக 23 ஆண்டுகளை பூர்த்தி செய்த பின்னர் 2019.12.11ஆந் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், தன்னுடைய சேவைக் காலத்தில் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செலுத்தியதாகவும் இதுவரை தனக்கு ஓய்வுதிய உரித்து கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கும் மனுதாரர், ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | பிறகு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமைகளை வழங்குவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் அடங்கிய அமைச்சரவை பத்திரம் 2025.03.14 தேதியிட்ட கடிதம் மூலம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது | பின்னர் நிரந்தர பதவி வழங்கப்பட்டுள்ள சிவில் ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரித்தை வழங்குவது சம்பந்தமாக சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக எடுக்கப்படுகின்ற முன்னெடுப்பின் முன்னேற்றம் மற்றும் அதற்கு அமைவாக மனுதாரரான டப்ளியூ.ஏ. சந்திரசோமவுக்கு ஓய்வூதிய உரித்தை வழங்குவது குறித்து குழுவில் சமர்ப்பிப்பதற்காக அறிக்கை ஒன்றை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு விதைப்பு வழங்கப்பட்டது. |
| **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 32 | திரு. எஸ்.ஏ.ஏ. பிரியந்த COM/PP/2025/152 சமர்ப்பித்தவர்: கௌரவ ருவன்திலக ஜயகொடி பா.உ. 2025.04.08 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: MPS/AD/07/04 | ஸ்ரீ லங்கன் விமான சேவையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அரசியல் பழிவாங்களுக்கு உள்ளாகி பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும், 2018.03.27ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க மீண்டும் தொழிலில் அமர்த்த வேண்டியபோதிலும் | | மீண்டும் முன்னுதாரணமாக அமையாதவாறு நிலுவைச் சம்பளமின்றி மீண்டும் சேவையில் அமர்த்துமாறு குழு விதப்புரை வழங்கியது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | அவ்வாறு இடம்பெறவில்லை எனவும், மத்திய அரசாங்க அமைச்சின் செயலாளரினால் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனியின் தலைவருக்கு 2018.04.26ஆந் திகதி வழங்கப்பட்ட கட்டளையை நடைமுறைப்படுத்துமாறும் அமைச்சரவையின் தீர்மானத்தின்படி தன்னை நிலுவைச் சம்பளத்துடன் சேவையில் அமர்த்துமாறும் தேவைக் காலத்தை கருத்தில் கொண்டு தனக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வை உரியவாறு பெற்றுக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துமாறும் கோரியுள்ளார். | | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| **போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு** | | | | |
| 33 | திரு. பீ.எம். ஜயந்த COM/PP/2025/88 சமர்ப்பித்தவர்: கௌரவ சதுர கலப்பத்தி பா.உ. 2025.05.22 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: MT/10/1/3/PP/2023/1161 திகதி : 2023.09.06 | 2000.05.02ஆந் திகதி இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சேவையில் இணைந்து கதிர்காமம் டிப்போவில் பேருந்து நடத்துனராக பணியாற்றியதாகவும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் கதிர்காமம் டிப்போவுக்கு கண்காணிப்பு | (அ) மனுதாரர் கதிர்காமம் டிப்போவிலிருந்து ஒழுங்கு உத்தரவின் மூலம் அம்பலாந்தோட்டை டிப்போவிற்கு மாற்றப்பட்டு தற்போது அம்பலாந்தோட்டை டிப்போவில் பணியாற்றி வருகிறார். | மனுதாரரின் புகார்கள் தற்போது நடுவர் மன்றத்தில் விசாரிக்கப்படுவதால், அந்த நடவடிக்கைகளை விரைவாக முடித்து முடிவுகளை வெளியிட ஏற்பாடுகளைச் செய்யுமாறு தொழிலாளர் ஆணையர் ஜெனரலுக்கு குழு |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
| --- | --- | --- | --- | --- |
| | | விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோது சாரதி ஒருவரால் தலைவருக்கு தெரிவிக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக ஏற்பட்ட வாய்த்தகராறு தொடர்பில் தான் முன்வைத்த முறைப்பாட்டுக்கு 2019.08.08ஆந் திகதி குற்றப்பத்திரிகை ஒன்றை வழங்கி, ஒழுக்காற்று விசாரணை நடத்தி தனக்கும் குறித்த சாரதிக்குமான ஒழுக்காற்றுக் கட்டளையாக ஒரு வார கால சம்பளத்திற்குச் சமமான அபராதம் மற்றும் பணியிட மாற்றத்தை வழங்கியதாகவும், அதில் தனக்கான ஒழுக்காற்றுக் கட்டளை மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட தாகவும், குறித்த சாரதிக்கான ஒழுக்காற்றுக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், தான் இடமாற்றம் பெற்றுக் கொண்ட அம்பலாத்தோட்டை டிப்போவில் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது தனக்கு கிடைக்க வேண்டிய சம்பளம், கொடுப்பனவுகள், லீவு கொடுப்பனவுகள் வழங்கப்படாமை சம்பந்தமாக தொழில் திணைக்களம் மற்றும் மனித உரிமைகள் ஆணையக் குழுவிலும் முறைப்பாடு செய்தபோதிலும் நிவாரணம் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கும் மனுதாரர் தனக்கு உரித்தான சம்பளம், கொடுப்பனவுகள் | (ஆ) ஒரு விஷயம் தொடர்பான நடுவர் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்து, ஒரு முடிவு வழங்கப்பட உள்ளது, மற்ற விஷயம் நடுவர் மன்றத்தில் நிலுவையில் உள்ளது. | தெரிவித்ததுடன் அந்த முடிவுகள் தொடர்பான உண்மைகளை பரிசீலித்த பிறகு, எதிர்காலத்தில் இந்த மனுவை மேலும் பரிசீலிக்க குழு முடிவு செய்தது |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | மற்றும் பதவி உயர்வை பெற்றுத் தருமாறு கோரியுள்ளார். | | |
| 34 | திரு. ஆர்.எஸ்.எஸ்.எச்.எம்.எச். தர்மபால ஹேரத்<br>COM/PP/2025/69<br>சமர்ப்பித்தவர்: கௌரவ தர்மபிரிய விஜேசிங்ஹ பா.உ.<br>2025.05.22 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: MTCA/10/1/3/97<br>திகதி : 2017.12.26 | தான் புகையிரத திணைக்களத்தில் 39 வருடங்கள் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி எனவும், தான் 2005 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் மற்றும் விசாரணை உத்தியோகத்தர் / பரிசோதகர் (போக்குவரத்து) போன்ற பதவிகளுக்காக விண்ணப்பித்ததாகவும், புகையிரத திணைக்களம் குறித்த விண்ணப்பபடிவங்களை தொலைத்து விட்டதாகவும் உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் பதவியை மனுதாரரான தனக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், அரசாங்க சேவைகள் ஆணைக் குழு அதனை நிராகரித்துள்ளதாகவும், அதனால் மனுதாரரான தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதை புகையிரத திணைக்களமும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கும் மனுதாரர் தனக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவி உயர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கோரி உள்ளார். | (அ) 2010 ஆம் ஆண்டு புலனாய்வு அதிகாரி/இன்ஸ்பெக்டர் (போக்குவரத்து) பதவிக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் தவறாக இடம் பெற்றுள்ளதாகவும், அவ்வாறு இடம் பெயர்ந்தது ரயில்வே துறையின் தவறு என்றும் மனுதாரர் வாதிட்டார்.<br><br>(ஆ) அவர் 2010 ஆம் ஆண்டு புலனாய்வு அதிகாரி/ஆய்வாளர் (போக்குவரத்து) பதவிக்கு விண்ணப்பித்துள்ளார்.<br><br>(இ) 2010 ஆம் ஆண்டில் உதவி போக்குவரத்து கண்காணிப்பாளர் பதவிக்கு எந்த விண்ணப்பமும் செய்யப்படவில்லை. | விசாரணை உத்தியோகத்தர் / பரிசோதகர் (போக்குவரத்து) பதவிக்கான பதவி உயர்வினை வழங்குவது பொருத்தமானதென குழு முடிவு செய்ததுடன், அதற்காக அமைச்சரவை பத்திரம் ஒன்றை தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்குமாறு விதப்புரை வழங்கப்பட்டது.<br><br>இவ்விடயத்தில் மனுதாரருக்கு தனித்துவமாக அமையும் வகையில் பதவியை வழங்க வேண்டும் எனவும் இந்த தீர்மானம் எதிர்காலத்தில் ஒரு முன்னுதாரணமாக இருக்காது எனவும் குழு மேலும் விதந்துரைத்தது. |
| 35 | திரு. கே.ஏ. | புகையிரத | (அ) மனு 7வது, | நிருவாக |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | தாப்றெவ் COM/PP/2025/76 சமர்ப்பித்தவர்: கௌரவ கயந்த கருணாதிலக பா.உ. 2025.05.22 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: AOP/PPC/15/2011 திகதி : 2016.02.18 | திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக பணியாற்றிக் கொண்டிருந்த தான் 2000.03.15ஆந் திகதி கண்காணிப்பாளருக்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் முதலிடத்தைப்பெற்று சித்தியடைந்த போதும் தனக்கு அந்தப் பதவி வழங்கப்படவில்லை எனவும் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை வழங்கிய கட்டளையை நடைமுறைப்படுத்தவில்லை எனவும் தெரிவிக்கும் மனுதாரர், இந்த விடயம் சம்பந்தமாக 8ஆவது பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட 2017.06.24ஆந் திகதிய விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றம் பற்றி ஆராய்ந்து ஓய்வு பெற்றுள்ள தனக்கு உரிய பதவி உயர்வினை வழங்கி அதற்கு நேரொத்ததாக ஓய்வூதியம் / நிலுவை சம்பளத்தை பெற்று தருமாறு கோரி உள்ளார். | 8வது மற்றும் 9வது நாடாளுமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, மனுதாரர் கோரிய நிவாரணத்தை வழங்க பல சந்தர்ப்பங்களில் பரிந்துரைகள் செய்யப்பட்டன.<br><br>(ஆ) இந்த விஷயம் நிர்வாக மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் சமர்ப்பிக்கப்பட்டது, இப்போது அந்த தீர்ப்பாயம் மனுதாரரின் கோரிக்கையை வழங்குவதற்கான முடிவை வெளியிட்டுள்ளது, மேலும் அந்த முடிவு செயல்படுத்தப்படவில்லை. | மேன்முறையீட்டு நியாய சபையினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் சட்டரீதியான கடப்பாட்டைக் கொண்டுள்ளதால், அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு விதப்புரை வழங்கியது. இந்த விடயத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் தேவையான ஆவணங்கள், தீர்ப்பின் பிரதி மற்றும் விதப்புரைகள் போன்றவற்றை அந்த ஆணைக் குழுவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| **பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு** | | | | |
| 36 | திரு. பி.ஜீ.டபிள்யூ. ஜயசிங்ஹ COM/PP/2025/21 | தனது வீட்டிற்கு பிரவேசிக்கும் பாதையில் தடங்கல் ஏற்படுத்தியமை தொடர்பாக 8வது | (அ) இது 17 வருடங்களாக ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது, | இந்தப் பிரச்சினையைத் இணக்கத்திற்கு கொண்டுவருவதற்காக சம்பந்தப்பட்ட |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | சமர்ப்பித்தவர்: கௌரவ சட்டத்தரணி யூ.பீ. அபேவிக்ரம, பா.உ. 2025.02.25 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: கடித இலக்கம்: | மற்றும் 9வது பாராளுமன்றங்களின் பொது மனுக்கள் பற்றிய குழுக்களுக்கு விதப்புரைகள் வழங்கப்பட்டபோதிலும், இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்பதால், மீண்டும் விசாரணையொன்றை நடாத்தி நியாயத்தைப் பெற்றுத்தருமாறு கோரியுள்ளார். | மேலும் முந்தைய குழுக்களின் முடிவுகளின்படி, தண்ணீரை வெளியேற்றுவதற்காக தொம்பே பிரதேச சபையால் ரூ. 1.5 மில்லியன் செலவில் ஒரு வடிகால் கட்டப்பட்டுள்ளது.<br><br>(ஆ) சாலையை கான்கிரீட் போடுவதற்கு ரூ. 1.7 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>(இ) இந்த சம்பவத்தில் மனுதாரர் செயல்பட்ட முறைமை | தரப்பினர்களான பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மேல் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், கம்பஹா மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர், கம்பஹ மாவட்ட பொறியாளர் மற்றும் தொம்பே பிரதேச சபை ஆகிய அனைத்து தரப்பினரினதும் உடன்பாட்டில், தற்போதுள்ள சட்ட வரையறைக்குள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, இயற்கையாக நீர் வழிந்தோடலுக்குத் தேவையான தொழில்நுட்ப அம்சங்களைக் கருத்திற் கொண்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும், நிதி ஒதுக்கீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளதால், இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படும் திகதி முதல் ஒரு மாத காலத்திற்குள் இதற்கான பணிகளை நிறைவுசெய்து குழுவிற்கு அறிக்கையிடுமாறும், வருகை தந்திருந்த அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. |
| **வலுசக்தி அமைச்சு** | | | | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | | |
| 37 | திரு. டீ.கே. ரணசிங்ஹ COM/PP/2025/04 சமர்ப்பித்தவர்: கௌரவ ஹர்சன ராஜகருணா, பா.உ. 2025.02.25 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: கடித இலக்கம்: மின்/நிர்வாக/6/மனுக்கள்/2016-13 | மேல் கொத்மலை மின் திட்டத்தால் தனது வீடு மற்றும் காணியை இழந்ததாகவும், அதற்கான வீடு அல்லது இழப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை என்றும், அது தொடர்பில் 2016 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பொது மனுக்கள் பற்றிய குழுவில் மேன்முறையீடொன்றை சமர்ப்பித்ததோடு, அந்தக் குழு தனக்கு வீடு அல்லது இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு விதப்புரை செய்துள்ளபோதிலும் அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதால் மீண்டும் விசாரணை செய்து தனது பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியுள்ளார். | (அ) அந்த வீட்டில் வசித்து வந்த பத்மநாதனுக்கு, அவர் இழந்த வீட்டிற்கு மாற்று வீடு வழங்கப்பட்டுள்ளது, மேலும் அவரது வசிப்பிடம் 2001 ஆம் ஆண்டு கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>(ஆ) 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உரிமைகோரல் தேர்வில் பத்மநாதன் என்ற ஒருவர் மட்டுமே கலந்து கொண்டார், மேலும் மனுதாரர் அதற்கு ஆஜராகவில்லை.<br><br>(இ) அதிகாரிகளின் அறிக்கைகளுக்கு மு'ன்னுக்குப் பின் முரணான மனுதாரரின் கருத்துக்கள்.<br><br>(ஈ) மதிப்பீட்டுத் திணைக்களத்தின் சட்டப்பூர்வ இழப்பீட்டுத் தொகை மதிப்பிடப்பட்டிருந்தாலும், மனுதாரர் அந்தத் தொகையை ஏற்க மறுத்துவிட்டார். | இந்தக் கருத்திட்டத்தின் கீழ் பிற காணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை கருத்திற் கொண்டு, மனுதாரருக்கு நியாயமான இழப்பீட்டுத் தொகையை வழங்க முடியுமென்றால் அதனை வழங்குமாறு மின்சார சபையின் தலைவருக்கு விதந்துரைக்கப்பட்டுள்ளதோடு, இந்த மனுவை குழு பலமுறை விசாரித்துள்ளதால் , |
| **கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு** | | | | |
| 38 | திரு. எம்.ஏ. விமலசேன | 1999.11.10 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மிகை | (அ) தொடர்புடைய மனு 9 ஆவது பாராளுமன்றத்தில் | பொது சேவை ஆணையத்தின் |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | COM/PP/2025/61<br>சமர்ப்பித்தவர்: கௌரவ இம்ரான் மகரூப், பா.உ.<br>2025.03.03 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்: கடித இலக்கம்: ED/4/58/1/8/173/64 | ஊழியர் அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III வகுப்பில் 'திட்டமிடல்' பதவிக்கு நியமிக்கப்பட்டதுடன், கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட நாளிலிருந்து நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கைக்கு உட்சேர்க்கப்பட்டதன் பின்னர் 2016.06.01 ஆம் திகதி தொடக்கம் கல்வி நிர்வாக சேவையின் I வகுப்பிற்கு பதவி உயர்வு பெற்றுக் கொண்டதாகவும், கல்வி நிர்வாக சேவை அலுவலர்களுக்கு 04 மேலதிக சம்பள உயர்வுகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படும் கல்வி அமைச்சின் செயலாளரின் இல4/பணிப்பாளர்/R/2/09 மற்றும் 1995.12.20 ஆந் திகதிய கடிதத்தின்படி, குறித்த 04 சம்பள உயர்வுகளை கோரியதாகவும், இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக்கோவையின் இலக்கம் 1225/32 மற்றும் 2002.03.01 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தாம் மிகை ஊழியர் நியமனத்தை பெற்றிருக்கும் காரணத்தின் அடிப்படையில் அதனை வழங்குவதை நிராகரித்ததாகவும் 04 சம்பள உயர்வுகளை வழங்குமாறும் கோரியுள்ளார். | பொது மனுக்கள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்டதாகவும்,<br>(ஆ) 1992.12.08 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி, இணையான மற்றும் நாடளாவிய சேவைகளின் அலுவலர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கானது என்பதுடன் மேற்கூறிய சேவைப் பிரமாணங்கள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை எனவும் மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழேயே 2009.06.20 ஆந் திகதி தொடக்கம் மிகை ஊழியர் அடிப்படையில் நியமனங்களைப் பெற்ற இலங்கை திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கும் 04 சம்பள உயர்வுகள் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படும் விடயங்கள்<br>(இ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய இலக்கம் PSC/EST/02-03/08/2018 | PSC/EST/02-03/08/2018 மற்றும் 2024.12.06 தேதியிட்ட கடிதத்தால் கோரப்பட்ட நிவாரணம் பெறப்பட்டு, தொடர்புடைய முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | மற்றும் 2024.12.06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு மேற்படி 04 சம்பள உயர்வுகளை உரித்தாக்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் | |
| 39 | திருமதி. டீ.ஜே. நிமன்திகா COM/PP/2025/53 சமர்ப்பித்தவர்: கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ. 2025.03.03 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: ED/05/152/05/2024/01-33 | மத்திய மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளல். - 2023 இன் கீழ் கிரெபிக் டிசைன் பாடத்திற்காக நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் முதலிடத்தை பெற்றுக்கொண்ட போதிலும், நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட்ட தகைமைகள் பரீட்சை அறிவிப்பில் கோரப்பட்டுள்ள தகைமைகளுடன் பொருந்தவில்லை எனக் குறிப்பிட்டு அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருந்த தன்னை அநீதியான முறையில் நீக்கியதாகவும் தெரிவித்து தனக்கு கிடைக்க வேண்டிய ஆசிரியர் நியமனத்தை பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை செய்து தருமாறு கோரியுள்ளார். | (அ) மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டாலும், அவருக்கு நிவாரணம் வழங்க தேவையான சட்ட ஏற்பாடுக்கான வசதிகள் எதுவும் இல்லை என்பது.<br>(ஆ) ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பது<br>(இ) இருந்த ஒரே வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது என்பது | (அ) கோரப்பட்ட நிவாரணத்தை விதப்புரை செய்ய முடியாதெனினும் (ஆ) ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பில் கவனம் செலுத்தி, எதிர்வரும் காலத்தில் மத்திய மாகாணத்தில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போது அவருக்கு முன்னுரிமை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் (இ) மத்திய மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளும் போது பிரச்சினைக்குரிய விடய உள்ளடக்கத்தில் 1/3ஐ(credits) உறுதிப்படுத்துவதற்காக குறித்துரைக்கபட்ட தொரு முறையியல் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் குழு விதப்புரை செய்தது. |

**3) நிவாரணத்திற்காக விதந்துரைக்கப்படாத மனுக்கள்**

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| **வலுசக்தி அமைச்சு** | | | | |
| 40 | திரு. ஜே. பீ. மந்திலக்க ஆரச்சி COM/PP/2025/196<br>சமர்ப்பித்தவர்: கௌரவ அனுராத ஜயரத்ன பா.உ.<br>2025.03.19ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: பதில்/நிருவாகம்/6/மனுக்கள்/2017-09<br>திகதி: 2019.06.05 | இலங்கை மின்சார சபையின் மின்மாணி வாசிப்பளராக சேவையாற்றிய தன்னுடைய தொழிலை எந்தவித நியாயமான காரணங்களும் இன்றி இல்லாமல் செய்ததாவும், தாம் இது பற்றி பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு மனுவொன்றைச் சமர்ப்பித்த பிறகு, மனுவை 2007ஆம் ஆண்டு விசாரணை செய்து, தனது முன்னைய சேவை நிலைமையை கருத்தில் கொண்டு கருணை அடிப்படையில் இலங்கை மின்சார சபையில் தொழிலாளி அல்லது அதற்குச் சமமமான பதவியொன்றை வழங்குமாறு விதந்துரைக்கப்பட்ட போதிலும், அந்த விதப்புரைகள் 2018ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டமையால், தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் மனுதாரர் இம்மனுவை மீண்டும் விசாரணை செய்து தன்னை 2007.03.21ஆம் திகதியில் மீண்டும் சேவையில் அமர்த்தி, அன்றிலிருந்து நிலுவைச் சம்பளம், ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பு மற்றும் | (அ) மனுதாரருக்கு 2007ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள பொது மனுக்கள் பற்றிய குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு 2016.03.02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது | மனுதாரருக்கு மேலதிக நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை இல்லையென விதப்புரை செய்து மனு தொடர்பான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | இல்லாதொழிக்கப்பட்ட ஏனைய அனைத்து கொடுப்பனவுகளையும் பெற்றுத்தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பித்துள்ளார். | | |
| **கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு** | | | | |
| 41 | திருமதி. பீ.டீ.டீ. பெரேரா COM/PP/2025/01 சமர்ப்பித்தவர்: கௌரவ ரவீ கருணாநாயக்க, பா.உ. 2025.03.06 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: கடித இலக்கம்: | தாம் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் நிதித் பிரிவில் IX ஆந் தர எழுதுனராகப் நிரந்தர சேவையில் இணைந்ததாகவும், அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருந்தும், தனக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் மற்றும் உரிய சம்பளம் வழங்கப்படவில்லை என்றும், 2016 ஆம் ஆண்டில் அரசியல் பழிவாங்கலுக்கு ஆளானவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்ட விதப்புரைகள் செயற்படுத்தப்படவில்லை எனவும் பின்னர் 2019ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் வகுதிகள் (MM 1-2) வழங்கப்பட்ட போதிலும் சரியான சம்பள படிநிலை அல்லது சரியான பதவிப் பெயர் கிடைக்காததால், 2015.12.31 திகிதியிலான சம்பள முரண்பாடுகளை நீக்கி, சரியான சம்பளத்தை வழங்குதல் மற்றும் 2007 ஆம் ஆண்டு முதல் முழு சம்பள குறை நிரப்புக் | (அ) அரசியல் பழிவாங்கலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் மனுதாரருக்கு நீதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>(ஆ) 2019 ஆம் ஆண்டில், தேசிய சம்பளம் மற்றும் பணியாளர் ஆணையம் மற்றும் மேலாண்மை சேவைகள் துறை மேலாண்மை சேவைகள் துறையின் இயக்குநர் ஜெனரலால் 28.04.2019 அன்று முழுமையான ஆய்வு நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது மனுதாரரின் சம்பளத்தை செயலாக்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறப்பட்டது, ஆனால் அந்த நேரத்தில் இலங்கை உர நிறுவனத்தின் சம்பள உயர்வு முறையிலேயே ஒரு சிக்கல் இருப்பது | அரசியல் பழிவாங்கலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான குழுவின் விதப்புரையின் அடிப்படையில் மனுதாரருக்கு நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மேலும் கோரியுள்ள நிவாரணத்தை வழங்கத் தேவையான ஏற்பாடுகள் குழுவிடம் இல்லை என்றும் அவதானிக்கப்பட்டு, இந்த மனுவின் நடவடிக்கைகளை நிறைவுசெய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும் மனுதாரரை ஒய்வூ பெறச்செய்தமையுடன் தொடர்புடையதாக ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டதாக உணர்ந்தால், அது தொடர்பாக குறிப்பிட்டு, அது தொடர்பாக நிவாரணம் பெறும் எதிர்பார்ப்பில் மீண்டும் பிறிதொரு மனுவை சமர்ப்பிக்க முடியும் என்றும் குழு மனுதாரருக்கு தெரிவித்தது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவுகளை வழங்குமாறும், 2018.03.27 ஆந் திகதி முதல் பிரதி நிதி முகாமையாளராக (MM 1-2) சம்பளப் படிநிலையில் அமர்த்தி மூப்பு அடிப்படையில் உரித்தாக வேண்டிய சிறப்புரிமைகளை வழங்கவும் மற்றும் 2019.07.29 முதல் நிதி முகாமையாளர் பதவிக்கு நியமிக்கவும் தேவையான ஏற்பாடுகளைச் செய்யது தருமாறு கோரப்பட்டுள்ளது. | கவனிக்கப்பட்டது. | |
| **பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு** | | | | |
| 42 | திரு. பிரியந்த குமாரகே COM/PP/2025/12 சமர்ப்பித்தவர்: கௌரவ அருண பனாகொட, பா.உ. 2025.02.20 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: 02/03/23/15/2022 திகதி: 2022.11.24 | தாம் ஒரு கான்ஸ்டபிளாக சேவையில் இணைந்ததாகவும், மேலும் 2001.12.06 ஆந் திகதி இடம்பெற்றதொரு சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு 2002.05.09 ஆந் திகதி தமக்கு எதிராக குற்றப்பத்திரிகை முன்வைக்கப்பட்டதுடன், இந்த ஒழுக்காற்று விசாரணையின் போது தனது 2 சம்பள ஏற்றங்கள் பிற்போடப்பட்டதாகவும் இதனால், தனக்கு பதவி உயர்வுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் வாய்ப்புகளை இழந்துள்ளதால் தனது சேவைக் காலத்தைக் கருத்திற் கொண்டு, பொலிஸ் சார்ஜன்ட் பதவிக்குப் பின்னர் கிடைக்கும் பதவியான | (அ) ஒழுக்காற்று உத்தரவுக்கு வழிவகுத்த சம்பவம்<br><br>(ஆ) முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்பதும்<br><br>(இ) தொடர்புடைய சம்பவம் நடந்து நீண்ட காலம் கடந்துவிட்டதாலும், உரிய காலப்பகுதியில் மேன்முறையீடு செய்து, சாட்சியங்களைக் விசாரிப்பதற்கான சந்தர்ப்பம் தவறவிடப்பட்டுள்ளதாலும், | நிவாரணம் வழங்குவதை விதந்துரைக்கவில்லை. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவி உயர்வினைப் பெறத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துதருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். | | |
| 43 | திரு. டபிள்யூ.எம். சாந்த குணதிலக்க COM/PP/2025/166 சமர்ப்பித்தவர்: கௌரவ ரோஹன பண்டார, பா.உ. 2025.05.09 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: 02/03/23/10/2023 | தாம் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் பொலிஸ் சேவையில் கடமையாற்றியதாகவும் சேவைக்காலம் 16 வருடங்கள் பூர்த்தியாகும் வேளையில் சட்டரீதியாக திருமணம் செய்துகொண்டுள்ள நிலையில் மீண்டும் திருமணம் செய்துகொண்ட குற்றத்திற்கு வழக்குத் தாக்கல் செய்து 2011.10.17 ஆந் திகதி தனது குடும்பத்திற்கு ஏற்பட்ட தீங்கிற்கு அரசாங்கக் கட்டணங்களைச் செலுத்தியதாகவும், தாம் சேவையில் இணைந்தபோது தனது தனிப்பட்ட தகவல்கள் தடைநீக்கற் சான்றிதழ் மூலம் பெறப்பட்டுள்ளதோடு, தனது திருமணம் குறித்த தகவல்களை ஒருபோதும் மறைத்ததில்லை எனவும் 2013.08.06 ஆந் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு இது தொடர்பில் மேன்முறையீடொன்றை தாக்கல் செய்த பின்னர் பொலிஸ்மா அதிபரிடம் தகவல் வினவப்பட்டுள்ள போதும் அதற்கு இதுவரை பதில் அனுப்பப்படவில்லை எனவும் பின்னர் பொலிஸ் ஆணைக்குழுவும் தனது மேன்முறையீட்டை | இந்த மனு தொடர்பான அனைத்து விடயங்களையும் பரிசீலித்த குழுவானது, மனுதாரர் கோரும் நிவாரணத்தை வழங்கத் தேவையான ஏற்பாடுகள் குழுவிடம் இல்லை என்பதைக் கவனித்து, இந்த மனு மீதான நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்குத் தீர்மானித்தது. | நிவாரணம் வழங்குவதை விதந்துரைக்கவில்லை. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | நிராகரித்துள்ளதாக அறிவித்ததாகவும் மேலும் 2011.03.03 ஆந் திகதி அநுராதபுரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனக்கு வழங்கிய குற்றப்பத்திரிகையில் உள்ளடங்கும் இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கு தன்னைக் குற்றவாளியாக்கி தொழிலையும் இல்லாமல் செய்தமையால் தனது மனைவி, பெற்றோர் மற்றும் தான் மிகவும் அநாதவரற்ற நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கும் மனுதாரர் இந்த ஒழுக்காற்று உத்தரவை திருத்தித் தருமாறு கோரியுள்ளார். | | |
| 44 | திரு. நிமல் சதரசிங்க<br>COM/PP/2025/174<br>சமர்ப்பித்தவர்: கௌரவ ரவீந்திர பண்டார, பா.உ.<br>2025.05.09 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்: 01/02/03/14/2024 | 1985 ஆம் ஆண்டு தொடக்கம் பொலிஸ் உத்தியோகத்தராக சேவையில் இணைந்து குற்றச்சாட்டிற்கு உள்ளாகி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, வழக்குத் தீர்ப்பின்படி ரூ.125,000 அரசாங்க கட்டணத்தை செலுத்திய பின்னர் வழக்கு முடிவடைந்ததாகவும், அவ்வாறான போதிலும் முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தாமல் 2022 ஆம் ஆண்டு சேவையிலிருந்து நீக்கப்பட்டதாகவும், தனது சேவையை நிறைவுசெய்யும் போது தாம் 55 வயதை பூர்த்திசெய்துள்ளமையாலும், தனது சேவைக்காலம் 35 வருடங்களாக | (அ) சம்பவத்தின் அடிப்படையில், இடமாற்றத்திற்குப் பிறகு மனுதாரர் தனக்குத் தெரிவிக்காமல் பணிக்குத் திரும்பத் தவறியதால், 11.07.2020 முதல் தனது பதவியை விட்டு வெளியேறுமாறு அவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஆ) வழக்கில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.<br><br>(இ) முறையான ஒழுங்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது நீதிமன்ற உத்தரவு | கோருகின்ற நிவாரணத்தை வழங்கத் தேவையான ஏற்பாடுகள் குழுவிடம் இல்லை என்பதை அவதானித்து, |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | காணப்படுவதாலும் தன்னை மீண்டும் சேவையில் அமர்த்தி ஓய்வூதிய உரிமையை பெற்றுத்தருமாறு கோரியுள்ளார். | கிடைத்ததால் ஒழுங்கு விசாரணை செயல்முறையை நிறுத்தி வைத்து, நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் ஒழுங்கு உத்தரவை பிறப்பித்தல். | |
| 45 | திரு. எம்.ஏ. நிஷாந்த குமார COM/PP/2025/146 சமர்ப்பித்தவர்: கௌரவ (வைத்தியர்) நிஹால் அபேசிங்ஹ, பா.உ. 2025.05.09 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: 02/03/23/64/2021 | துணை சேவை பொலிஸ் பரிசோதகராகப் சேவையில் இணைந்ததாகவும், கல்கிசை பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றியபோது, தாம் ஒரு நோயால் பாதிக்கப்பட்டதாகவும், 2005.10.11 ஆந் திகதியின் பின்னர் தனக்கு சேவைக்கு சமூகமளிப்பதில் சிரமம் ஏற்பட்டதாகவும் தொடர்புடைய அறிவித்தல்களை செய்த போதிலும், 2016.06.16 ஆந் திகதி தனது சேவை இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதாகவும் தொடர்புடைய விடயம் தொடர்பில் தயவுசெய்து கவனத்திற்கொண்டு மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | (அ) மனுதாரரினால் குறிப்பிடப்பட்ட நோய் தொடர்பில் சிகிச்சை பெறுவதற்காக பொலிஸ் மருத்துவமனைக்கு செல்லவில்லை எனவும்<br><br>(ஆ) சேவைக்குச் சமுகமளிக்க முடியாமல் போனமை குறித்து சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களில் உள்ள முரண்பாடுகள் | நிவாரணம் வழங்குவதை விதப்புரை செய்யவில்லை. |
| **கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு** | | | | |
| 46 | திரு. டபிள்யூ. டபிள்யூ. தமரசிறி COM/PP/2025/52 சமர்ப்பித்தவர்: கௌரவ அஜந்த கம்மெத்தகே பா.உ. | மார/பல்லாவெல மகா வித்தியாலத்தில் உதவி ஆசிரியராக கடமையாற்றிய தாம், 2012.05.02 ஆந் திகதி தொடக்கம் 215.01.09 ஆந் திகதி வரை முன்னாள் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி | (அ) கௌரவ அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பணியாளர் நியமனம் தொடர்பாக ஜனாதிபதி | மனுதாரருக்கு நிவாரணம் வழங்கத் தேவையான ஒதுக்கீடுகள் குழுவிடம் இல்லை |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | 2025.03.03 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: ED/05/152/05/2024/01-35 | கஜதீர அவர்களின் அமைச்சின் பணியாட்டொகுதியில் ஊடக ஒருங்கிணைப்பாளராக சேவையாற்றிய போதிலும் அந்தக் காலப்பகுதிக்குரிய குறிப்பிட்ட சம்பளத்தொகையை சிறைச்சாலைகள் அமைச்சின் மூலம் முலடியன வலயக் கல்விக் காரியாலயத்திற்கு வழங்கவில்லை என்பதால் தற்போது அந்தப் பணத்தொகைய தனக்கு மீளளிப்புச் செய்ய நேரிட்டிருப்பதாக தெரிவித்துள்ள மனுதாரர் குறிப்பிட்ட பணத்தொகை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மூலம் முலடியன வலயக் கல்விக் காரியாலயத்திற்கு செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | செயலகத்தால் வெளியிடப்பட்ட 14.05.2010 தேதியிட்ட பொதுச் செலவு மேலாண்மை சுற்றறிக்கையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது, மனுதாரர் "ஊடக ஒருங்கிணைப்பாளர்" என்ற பதவியைக் குறிப்பிடவில்லை, மேலும் அமைச்சகத்தின் பதிவுகளில் அவருக்கு வழங்கப்பட்ட எந்த நியமனக் கடிதமும் இல்லை, அந்த பதவிக்கு அத்தகைய நியமனக் கடிதம் எதுவும் பெறப்படவில்லை என்று மனுதாரரே அனுப்பிய கடிதமும் கோப்புகளில் இருப்பதாக நீதி அமைச்சகம் சமர்ப்பித்தது.<br><br>(ஆ) "ஊடக ஒருங்கிணைப்பாளர்" பதவியை ஊடக செயலாளர் பதவியாகக் கருதலாம் என்றும், ஆனால் அந்தப் பதவிக்கான சம்பளம் வேறொருவருக்கு வழங்கப்பட்டது என்றும் நீதி | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | அமைச்சினால் முன்வைக்கப்பட்ட உண்மைகள்.<br><br>(இ) புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சகத்துடன் இணைக்கப்பட்ட சேவைக் காலம் தொடர்பாக ஊதியமின்றி ஆசிரியர் சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிப்பதற்கு தென் மாகாண பொது சேவை ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>(ஈ) அவர் கற்பித்தல் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும், நியமனக் கடிதம் இல்லாமல் அமைச்சரின் ஊடக ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்ற அவருக்கு முறையான நியமனம் வழங்கப்பட்டது. | |
| 47 | திருமதி. எம்.கே. எம். தர்மசிறி COM/PP/2025/68 சமர்ப்பித்தவர்: கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்ஹ பா.உ. 2025.03.03 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்ப | 1989 ஆம் ஆண்டு தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனத்தின் கீழ் அரசாங்க சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டதாகவும், 23 வருடங்களில் க.பொ.த (சா.த.) பரீட்சைப் பெறுபேற்றுக் குறிப்புகள் பிழையானவையாகக் கருதப்பட்டு, எவ்வித | (அ) ஆட்சேர்ப்புத் தகைமைகள்<br><br>(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் போலியானவை என பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளமை. | நிவாரணம் வழங்குவதை விதப்புரை செய்யவில்லை |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | ட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்:ED/02/29 /03/02/424 திகதி: 2022.11.08 | அறிவித்தலுமின்றி தனது சேவை இடைநிறுத்தப்பட்டதாகவும் 23 வருட சேவைக் காலத்தைக் கருத்திற்கொண்டு தனக்கு ஓய்வூதியத்தை பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். | | |
| **பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு** | | | | |
| 48 | திரு. நுவன் முஹந்திரம் COM/PP/2025/105 சமர்ப்பித்தவர்: கௌரவ நந்தன பத்மகுமார பா.உ. 2025.05.20 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: IAD/EST/GA 15/PP-GNRL 2022 | 2003 ஆம் ஆண்டு தொடக்கம் தீயணைப்பு வீரராகப் பணியாற்றியதாகவும், தவிர்க்க முடியாத காரணங்களால் 2017 ஏப்ரல் முதல் கடமைக்குச் சமூகமளிக்க முடியவில்லை என்றும் எழுத்துமூலமான அறிவிப்பின்றி தனது சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தொழிலை மீளப் பெற்றுத்தருமாறு கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். | (அ) மனுதாரருக்கு தனது சேவைக்குச் சமூகமளிப்பதில் முன்னேற்றத்தை எய்துவதற்கு நிறுவனம் வழங்கிய அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தத் தவறிவிட்டார் என்பதும்,<br>(ஆ) தனது கடமைகளை நிறைவேற்றுவதில் பொறுப்பின்றி செயற்பட்டிருத்தல் என்பது<br>(இ) மனுதாரர் அநீதிக்குள்ளாக்கப்பட்டுள்ளார் என்பதற்கு தெளிவான சாட்சிகள் இல்லை என்பது | கோரியுள்ள நிவாரணத்தை விதந்துரைக்கவில்லை. |
| 49 | திரு. எஸ்.டபிள்யூ திலகரத்ன COM/PP/2025/158 சமர்ப்பித்தவர்: கௌரவ தனுர திசாநாயக்க பா.உ. 2025.05.20 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் | தனக்குச் சொந்தமான கண்டி, மஹய்யாவ, கடுகஸ்தொட வீதி, இலக்கம் 81/1 இல் அமைந்துள்ள தலுக்கஹகொடுவ வயற் காணிக்கு சுதர்ம தனபால நொத்தாரிஸ் எழுதி அத்தாட்சிப்படுத்திய 110 ஆம் இலக்க மற்றும் 1987.11.27 ஆந் திகதிய காணி உறுதி கண்டி | (அ) மனுதாரர் குறிப்பிடும் நிலம் நூர் நஜிமா என்கிற நூருல் நஜிமா உசேன் என்பவருக்குச் சொந்தமானது என்றும், பின்னர் அவர் அந்த நிலத்தை அஜீஸ் முகமது கலீல் என்ற ஒருவருக்கு விற்றதாகவும், | அதன்படி, இந்த அனைத்து விடயங்களையும் கருத்திற் கொள்ளும்போது, மனுதாரரான திலகரத்ன தனக்குச் சொந்தமில்லாத ஒரு காணி மீது இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார் என்பதாலும், |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | தொடர்பு இலக்கம்: IAD/EST/GA 15/PP-GNRL 23 | காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்தக் காணியை கொள்வனவு செய்த நாளிலிருந்து தான் எவ்வித விற்பனையையோ அல்லது உரித்து மாற்றத்தையோ செய்யவில்லை எனவும் அந்தக் காணி தொடர்பில் கண்டி காணிப் பதிவு அலுவலகத்தில் இலக்கம் A/213/74 உடைய இருமடித்தாளில் பிழையான பதிவு இடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்ற மனுதாரர், பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இடப்பட்டுள்ள பதிவினை சரிசெய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். | பின்னர் அஜீஸ் முகமது கலீல் இந்த நிலத்தை மனுதாரருக்கு 23.11.1987 அன்று விற்றதாக மனுதாரர் கூறுகிறார் என்றும் மனுதாரர் கூறுகிறார்.<br><br>(ஆ) கண்டி நிலப் பதிவு அலுவலகத்தில் 25.11.1987 தேதியிட்ட பத்திர எண் 110 இன் கீழ் டைரி எண் 22559 மற்றும் 27.11.1987 தேதியிட்ட கோப்பு எண் A 213/74 இன் கீழ் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் 10 பேர்ச்சர்ஸ் நூர் நஜிமா அல்லது நூருல் நஜிமா ஹுசைன் என்பவரால் வேறொரு தரப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.<br><br>(இ) கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு பிரிவு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, மேலும் மனுதாரரும் அதில் ஒரு தரப்பினர், மேலும் தீர்ப்பின்படி, மனுதாரருக்கு நிலத்தின் மீது உரிமை இல்லை, மேலும் மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை | குழுவில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கண்டி காணி பதிவாளர் அலுவலக அதிகாரிகளால் மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக குழுவின் அவதானத்திற்கு புலப்படவில்லைஎன்பதாலும், மனுதாரருக்கு நிவாரணத்தை விதப்புரை செய்வதற்கு குழுவிடம் ஏற்பாடுகள் இல்லாததாலும், இந்த மனுவின் நடவடிக்கைகளை நிறைவுசெய்வதற்கு குழு தீர்மானித்தது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | 07.12.2012 அன்று கௌரவ உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. | |
| 50 | திரு. எம். வில்மட் பெரேரா COM/PP/2025/65 சமர்ப்பித்தவர்: கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல பா.உ. 2025.03.11 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. | மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டை அதிகாரப்பூர்வமாக தனக்கு இருப்பாட்சி செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) நிர்வாக விவகாரங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளரினால் (ஒம்பூட்ஸ்மன்) இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(2022.12.20 ஆந் திகதி இலக்கம் OMB/P/2/3/3773/2022)<br><br>(ஆ) நிர்வாக விவகாரங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்பூட்ஸ்மன்) அறிக்கை மீது மனுதாரர் திருப்தி அடையாததால், குழு தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் அழைத்து இந்த விடயத்தை மறுவிசாரணை செய்ய குழு முடிவு செய்தது.<br><br>(இ) மனுதாரர் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக குழுவிற்கு தெளிவாக விளக்கத் தவறியுள்ளார். | நிவாரணம் வழங்குவதை விதப்புவதை செய்யவில்லை. |
| **பாதுகாப்பு அமைச்சு** | | | | |
| 51 | திருமதி. பி.எம். ஹெரியட் | பி.எம். இந்திரரத்ன என்ற பிள்ளை | (அ) இந்த மனு 2022.07.05 மற்றும் | இந்த மனுவின் நடவடிக்கைகளை |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | நோனா COM/PP/2025/163 சமர்ப்பித்தவர்: கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா பா.உ. 2025.03.14 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MOD/DEF/14/22/01/PPC/33 மற்றும் MOD/DEF/GS-S/14/22/01/PPC/33(25) | பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் அப்பிள்ளையை தான் பராமரித்து வளர்த்ததாகவும், இராணுவத்தில் சேர்ந்த இப்பிள்ளை 1988 ஆம் ஆண்டு ஜயசிகுரு இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போனதாகவும் 1977 தொடக்கம் அவரை தனது கட்டுக்காவலில் பராமரித்து வந்ததால் அவர் மரணித்ததன் பின்னர் இழப்பீட்டுத் தொகை மற்றும் கொடுப்பனவுகளை 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 பெப்ரவரி வரையில் தான் பெற்று வந்ததாகவும், கிராம அலுவலகருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இவ்வாறு பெறப்பட்ட கொடுப்பனவுத் தொகையை பிள்ளையின் பெற்றோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கும் மனுதாரர், இந்த விடயம் குறித்து விசாரணையை நடாத்தி, அந்த சம்பளத்தில் குறைந்தது அரைவாசியையாவது தனக்கு வழங்குமாறு கோரி மனுவினை சமர்ப்பித்துள்ளார். | 2024.08.06 ஆகிய தேதிகளில் இரண்டு முறை பரிசீலிக்கப்பட்டது மற்றும் அதன் பரிந்துரைகளின்படி அட்டர்னி ஜெனரலின் ஆலோசனை பெறப்பட்டது.<br><br>(ஆ) அவருக்கு வழங்க வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சட்டப்பூர்வ பாதுகாவலர்களுக்கு அட்டர்னி ஜெனரல் அறிவுறுத்தியுள்ளார்.<br><br>(இ) பி.எம். இந்திரரத்ன இராணுவத்தில் சேர்ந்தபோது, அந்த சிப்பாயின் தந்தை பி.எம். சோமரத்ன, அவரது நெருங்கிய உறவினராகக் குறிப்பிடப்பட்டார் | நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. |
| 52 | திரு. எம்.பீ. ஜயசேகர COM/PP/2025/104 சமர்ப்பித்தவர்: கௌரவ நந்தன பத்மகுமார பா.உ. 2025.03.14 ஆந் திகதி விசாரணை | தான் 1991.01.04 ஆந் திகதி இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படையணியில் இணைந்து 22 ஆண்டுகள் பணியாற்றி 2014.06.14 ஆந் திகதி ஓய்வு பெற்றதாகவும், பயங்கரவாத | (அ) மனுதாரர் ஓய்வுபெறும் போது ஏதேனும் உடல்நலக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதையும், அந்த நேரத்தில் அவர் நல்ல உடல்நலத்துடன் | இந்த மனுவின் நடவடிக்கைகளை நிறைவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MOD/PAC/05/PPC/2023 திகதி : 2023.08.21 | நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக 2003 ஆம் ஆண்டு நாகர் கோவில் முன்னரங்கு பாதுகாப்பு வலயத்தில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது அங்கவீன நிலைக்கு உட்பட்டதாகவும், 2008 ஆம் ஆண்டில், தமது அங்கவீன நிலைமை மோசமடைந்ததால், சிகிச்சைக்காக இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், தான் அங்கவீனமடைந்த நாளிலிருந்து ஓய்வு பெற்ற திகதி வரையான 6 ஆண்டுகள் பணியாற்றியுள்ளதாகவும் தற்போது கிடைக்கப்பெறும் ஓய்வூதியத் தொகையானது வாழ்க்கையை நடாத்தப் போதுமானதாக இல்லையென்பதால் ஊனமுற்றோர் கொடுப்பனவை தயாரித்துத் தருமாறு 2016.03.17 ஆந் திகதி தொடக்கம் இதுவரையில் கோரிக்கைகளை சமர்ப்பித்தும் அதில் பயன் கிட்டவில்லை எனவும் தான் இராணுவத்தில் சேவையாற்றிய காலப்பகுதியில் அங்கவீன நிலைக்கு உட்பட்டதால் ஊனமுற்றோர் | இருந்தார் என்பதையும் ஓய்வூதிய ஆவணங்கள் பதிவு செய்துள்ளன என்பதையும் நிரூபிக்க எந்த மருத்துவ அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>(ஆ) ஓய்வூதிய உரிமை தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் உள்ள எந்தவொரு பலவீனத்தையும் குறிக்கும் எந்த ஆவணங்களும் சம்பளம் மற்றும் பதிவேடுகள் இயக்குநரகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் சம்பளம் மற்றும் பதிவேடுகள் இயக்குநரகம் வைத்திருக்கும் ஆவணங்களில் எந்த காயமும் குறிப்பிடப்படவில்லை.<br><br>(இ) மனுதாரர் ஊனமுற்றோர் ஊதியம் அல்லது இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை. | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு இடையீடு செய்யுமாறு இராணுவத்திடம் கோரிக்கை விடுத்ததாகவும் குறிப்பிடும் மனுதாரர் தனக்கு நியாயத்தை நிலைநாட்டித் தருமாறு கோரி இந்த மனுவினை சமர்ப்பித்துள்ளார். | | |
| **வலுசக்தி அமைச்சு** | | | | |
| 53 | திரு. எம்.ஜீ. மைத்ரீசேன COM/PP/2025/194 சமர்ப்பித்தவர்: கௌரவ நலீன் ஹேவகே பா.உ. 2025.03.19 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: ADM/12/05/09 திகதி: 2024.04.19 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து ஊழியர் குழுவொன்றும் சுயவிருப்பத்தில் ஓய்வு பெற்றதாகவும், ஆனால் தனக்கு வழங்க வேண்டிய சம்பள நிலுவைத் தொகை இன்றுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் மனுதாரர், தனக்கு வழங்க வேண்டிய சம்பள நிலுவைத் தொகையைப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றார். | (அ) அந்த ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு இந்தச் சம்பள உயர்வுக்கு உரித்துப் பெற முடியாது என அமைச்சரவைத் தீர்மானம் எடுத்திருப்பதாலும் (ஆ) இந்தத் தீர்மானத்திற்கு எதிராக மனுதாரர் சமர்ப்பித்துள்ள மேன்முறையீட்டினை உயர்நீதிமன்றம் விசாரணை செய்து நிராகரித்துள்ளதாலும் | இந்த மனுவின் விசாரணை நடவடிக்கைகளை இத்துடன் நிறைவு செய்வதற்கு குழு தீர்மானித்தது. |
| **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 54 | திருமதி. அமாஷா நிர்மாணி எதிரிமுனி COM/PP/2025/177 சமர்ப்பித்தவர்: கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர பா.உ 2025.04.08 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்ப | தேசிய சேமிப்பு வங்கியில் சேவையாற்றி 2023.09.13 ஆந் திகதி 02 வருட காலத்திற்கு சம்பளமற்ற விடுமுறையைப் பெற்று,2024.01.04 ஆந் திகதி வங்கிக்கு இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்ததாகவும் தான் சம்பளமற்ற விடுமுறையில் இருந்த காலத்தை | (அ) மனுதாரர் ஒப்பந்தத்தின் உடன்பாடுகளை மீறியுள்ள பின்புலத்தில் எழுத்துமூல ஒப்பந்தத்தின் உடன்பாடுகளை மீண்டும் திருத்துவதற்காக செய்யப்படும் கோரிக்கை நியாயமானதல்ல என்பது. | கோருகின்ற நிவாரண உரித்தினை விதந்துரைக்கவில்லை. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | ட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MF1/11/03/12/03/COPP/GEN | கவனத்திற்கொள்ளாமல் ஒப்பந்தம் செய்துகொண்ட முழுத்தொகையையும் தனது சேமலாப நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதாக வங்கி அறிவித்திருப்பதாகவும் தனக்குரிய சேமலாப நிதியை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | (ஆ) வெளிநாட்டுக்கு பயணித்திருக்கையில் சேவையிலிருந்து இராஜினாமா செய்த அனைவருக்கும் ஒரே முறையியலின்படி பிணைமுறியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது | |
| 55 | திரு. கால்லகே ஜினப்பிரிய COM/PP/2025/31 சமர்ப்பித்தவர்: கௌரவ ரத்ன கமகே பா.உ. 2025.04.08 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MF1/11/03/11/08/COPP/GEN | மக்கள் வங்கியில் பணியாற்றியபோது இடம்பெற்றதொரு சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்ட தண்டனையானது ஒரு பக்கச்சார்பான தீர்மானம் எனவும், முதல் சேவை நீடிப்பினை எதிர்பார்த்திருந்த போதிலும், அவரது சேவையை 2015.01.03 ஆந் திகதி நிறைவுசெய்ய நேரிட்டதாகவும், 60 வருடங்கள் வரை சேவையாற்றும் இயலுமை காணப்பட்டதாகவும், 60 வருடங்கள் வரை சேவையில் ஈடுபட்டிருப்பின் தனக்கு கிடைக்க வேண்டிய கூட்டு ஒப்பந்தத்துடன் தொடர்புடைய சம்பள அதிகரிப்பு, பணிக்கொடை, வருடாந்த சம்பள அதிகரிப்பு, விடுமுறை, பதவியுயர்வுகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | (அ) மனுதாரர் சுட்டிக்காட்டிய சம்பவம் மற்றும் அதைச் சுற்றியுள்ள உண்மைகள்<br><br>(ஆ) நிறுவனம் தடைகளை விதித்து மனுதாரருக்கு மேல்முறையீடு செய்ய வாய்ப்பளித்துள்ளது<br><br>(இ) சம்பந்தப்பட்ட சம்பவங்களில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், ஒரு முக்கிய அதிகாரியாக மனுதாரர் காட்டிய கவனக்குறைவான மற்றும் பொறுப்பற்ற நடத்தை<br><br>(ஈ) வங்கியால் ஓய்வு பெற்ற ஊழியருக்கு வழங்கப்படும் அனைத்து ஓய்வூதிய சலுகைகளையும் அனுபவித்து | நிவாரணம் வழங்குவதை விதந்துரைக்கவில்லை. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பணத்தொகை மற்றும் கிடைக்க வேண்டிய நிலுவை ஓய்வூதியத் தொகையையும் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றார். | வருகிறது. | |
| 56 | திரு. செனரத் ஹெட்டியாரச்சி COM/PP/2025/06 சமர்ப்பித்தவர்: கௌரவ ஹர்சன ராஜகருணா பா.உ. 2025.04.08 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக: MF1/11/03/11/08/COPP/GEN | மக்கள் வங்கியில் 26 வருட சேவைக்காலத்தைக் கொண்டிருப்பதாகவும், 2017 ஆம் ஆண்டில் ஒரு பலிவாங்கல் காரணமாக சேவையை விட்டும் விலக நேரிட்டதாகவும் குறித்த விலகலை அங்கீகரித்த பணிப்பாளர் சபை அறிக்கையில் மேற்படி சம்பவத்தை உள்ளடக்கியிருப்பதாக தலைவர் தனக்கு அறிவித்திருப்பதாலும் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து வங்கிக்கு எதிராக சாட்சியங்களை பெற்றுக்கொள்ள முடியாதென்பதால் நீதிமன்றத்தை நாடாமல் இருக்க முடிவு செய்ததாகவும் 55 வயது பூர்த்தியடைந்திருப்பதால் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வது தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை வங்கி தள்ளுபடி செய்ததாகவும் தெரிவிக்கும் மனுதாரர் தனக்கு நியாயத்தை நிலைநாட்டித் தருமாறு கோரியுள்ளார். | (அ) மனுதாரர் குறிப்பிடுவது போன்று மனுதாரரிடம் தனிப்பட்ட முறையில் பழிவாங்கினார் என்ற மனுதாரரின் கூற்றை ஆதரிப்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்பதோடு இது தொடர்பாக வங்கி முகாமைத்துவத்திடம் அவர் முறைப்பாடு செய்ததற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரமும் இல்லை எனவும்<br>(ஆ) மனுதாரர், மக்கள் வங்கியின் பொது முகாமையாளருக்கு 2017.06.12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம், மக்கள் வங்கியின் பொது முகாமையாளருக்கு பல்வேறு தனிப்பட்ட காரணங்களுக்காக ஓய்வு பெறுவதற்கு சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளார் எனவும்,<br>(இ) 2022 டிசம்பர் மாதம் தொடக்கம் மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற | கோரியுள்ள நிவாரணத்தை வழங்குவதற்கு விதப்புரை செய்யப்படவில்லை. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | ஒருவருக்குரிய அனைத்து நன்மைகளையும் அவர் அனுபவித்து வருவதாகவும் தகவல்கள் முன்வைக்கப்பட்டன. | |
| **போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு** | | | | |
| 57 | திரு. டபிள்யூ.ஏ.ஏ.டீ. புஷ்பகுமார<br>COM/PP/2025/71<br>சமர்ப்பித்தவர்: கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்ஹ பா.உ.<br>2025.05.22 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்: MPS/AD/07/04<br>திகதி : 2024.05.27 | வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தில் 1985ஆம் ஆண்டு தொடக்கம் சேவையாற்றிய பின்னர் ஒய்வுபெற்ற தனக்கு முகாமைத்துவம் அநீதியான முறையில் இல்லாமல் செய்த கணக்கு உதவியாளர் பதவிக்குரிய உயர்வினையும் மற்றும் உதவிக் கணக்காளர் பதவிக்குமுய உயர்வினையும் முறையே 1993 மற்றும் 1997 ஆகிய வருடங்கள் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் வழங்கி அதற்கொப்பான வகையில் கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையையும் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து தருமாறு மனுதாரர் தனது மனுவின் மூலம் கோரியுள்ளார். | அ) ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போது கருத்திற்கொள்ளப்பட்ட தகைமைகள் மற்றும் கருத்திற்கொள்ளப்பட்ட உயர் தகைமைகள்<br>(ஆ) மனுதாரர் பணியிலிருந்து ஒய்வு பெற்றிருப்பதாலும் கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வுகளை வழங்கும் சாத்தியம் இல்லையெனவும் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் ஒரு வர்த்தக அமைப்பு என்பதும் | நிவாரணம் வழங்குவதை விதப்புரை செய்யவில்லை. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 58 | திரு. என்.சீ.எஸ். பிரேமலால் மெண்டிஸ் COM/PP/2025/96 சமர்ப்பித்தவர்: கௌரவ ஹெக்டர் அப்புஹாமி பா.உ. 2025.05.22 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MT/10/1/3/153 திகதி : 2023.01.25 | 1980.10.25 ஆந் திகதி இ.போ.ச வடமேல் மாகாணத்தின் வென்னப்புவ டிப்போவின் டிப்போ வீதிப் பரிசோதகர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டதாகவும் 30 வருடகால தொடர்ச்சியான சேவைக் காலத்தின் பின் 2011.02.08 ஆந் திகதி 55 வயது பூர்த்தியானதன் காரணமாக ஓய்வுபெறச் செய்யப்பட்டதாகவும் தான் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி வரை கடமையாற்றிய 168 ½ நாட்களுக்கு சட்டவிரோதமாகவும் இ.போ.ச ஒழுங்குப் பிரமாணத்திற்கு முரணாகவும் சம்பளம் செலுத்தவில்லை எனவும் இந்த விடயம் தொடர்பாக 2017.02.17 ஆந் திகதி குருநாகல் உதவித் தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்ததாகவும் 60 வயது வரை கடமையாற்றுவதற்கு இ.போ.சா. ஊழியர்களுக்கு வாய்ப்புக்கள் உள்ளபோதிலும் தன்னை 55 வயதில் வலுக்கட்டாயமாக ஓய்வுபெறச் செய்தமை தொடர்பில் புத்தளம் உதவித் தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்ததாகவும் இந்த முறைப்பாடுகளுக்கு இதுவரை தீர்வு கிடைக்காமையால் தனக்கு நிவாரணம் பெற்றுத்தரும்படி மனுவின் மூலம் கோரியுள்ளார். | (அ) 2024.06.19 ஆந் திகதி நடைபெற்ற 9ஆவது பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் பற்றிய குழுவிலும் இந்தக் கோரிக்கை தொடர்பாக விசாரணை செய்யப்பட்டுள்ளதெனவும் (ஆ) 168 ½ நாள் சம்பளம் தொடர்பான கோரிக்கையை உறுதிப்படுத்துவதற்கு போதுமான ஆதாரங்களை முன்வைக்கத் தவறியுள்ளமையும் நீண்ட மற்றும் விரிவான விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்பதும் (இ) தொழில் ஆணையாளர் நாயகம் இந்த மனு தொடர்பில் முன்வைத்துள்ள விடயமான 60 வயதுக்கு முன்பாக ஓய்வுபெறச் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் 168 ½ நாள் சம்பளம் தொடர்பாக மனுதாரர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் நடுத்தீர்ப்புக்கு | நிவாரணம் வழங்குவதற்கு விதப்புரை செய்யவில்லை. தொழில் ஆணையாளர் நாயகத்தின் IR/COM/04/2017/14 ஆம் இலக்க மற்றும் 2024.08.16 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனுதாரருக்கு ஏதேனுமொரு வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு அல்லது நடுவர் சபையை நாடுவதற்கு இந்தத் தீர்ப்பின் மூலம் எவ்விதத் தடங்கல்களும் இல்லையென்பது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆற்றுப்படுத்த முடியும் என்பதும் | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் 2025.02.20 முதல் 2025.05.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான பொது மனுக்கள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கை<br><br>**சுகாதார மற்றும் வெசகுசன ஊடக அமைச்சு** | | | | |
| 59 | **திரு.எச்.டீ.ரஞ்சன்**<br>**COM/PP/2025/90**<br>**சமர்ப்பித்தவர்: கௌரவ (வைத்தியர்) ஜகத் குணவர்த்தன, பா.உ.**<br>**2025.04.10ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.**<br>**அமைச்சின் தொடர்புடைய இலக்கம்: MMI/AD2/16/10-vol I** | **தபால் திணைக்களத்தின் கொழும்பு மத்திய தபால் பரிமாற்றத்துக்கு இணைக்கப்பட்டிருக்கையில் இடம்பெற்றுள்ள ஒரு முறைகேடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் தண்டனை வழங்கும செயன்முறை நியாயமற்றது எனக் தெரிவித்துள்ள மனுதாரர், தமக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை வலுவற்றதாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.** | **(அ) அரசாங்க உத்தியோகத்தர்கள் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டுமெனவும், அரச நிறுவனங்கள் மீதான மக்கள் நம்பிக்கை**<br>**(ஆ) ஒழுக்காற்று கட்டளை பிறப்பிக்க காரணமான முறையான ஒழுக்காற்று விசாரணையின்போது மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படாமை** | **நிவாரணம் வழங்குவதற்கு விதப்புரை செய்யப்படவில்லை.** |
| 60 | **திரு.தொன் கமகே ரூபசிங்க,**<br>**COM/PP/2025/257**<br>**சமர்ப்பித்தவர்: கௌரவ அஜித் அகலகட, பா.உ.**<br>**2025.04.10ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.**<br>**அமைச்சின் தொடர்புடைய இலக்கம்: MMI/AD2/16/10-vol I** | **1977.09.09ஆந் திகதி தபால் நிலைய சுமைதூக்கியாளராக மொணறாகலை தபால் அதிகாரி அலுவலகத்தில் பணியில் இணைந்து 1985.05.12ஆந் திகதி தபாற்காரர் பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும், 1997.08.08ஆந் திகதி முதல் சுமார் 40 வருடங்கள் மொணறாகலை தபால் அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நக்கல உப தபால் அலுலவத்தில் பணியாற்றியதாகவும், இங்கு உப தபால் நிலைய அதிபர் தம்முடன் ஏற்படுத்திக் கொண்ட தனிப்பட்ட பகை காரணமாக திட்டமிட்ட முறையில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி 2016.05.05ஆந் திகதி முதல் தடவையாக தமது** | **(அ) மனுதாரர் இரண்டு (02) சந்தர்ப்பங்களில் அஞ்சல் பொருட்கள் மற்றும் கடிதங்களை வழங்குவதில் தனது கடமையை புறக்கணித்து, அதன் மூலம் தனது வாடிக்கையாளர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தியுள்ளார்**<br>**(ஆ) ஐந்து (05) சம்பள உயர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன, அதாவது முதல் முறை மூன்று (03) சம்பள உயர்வுகள் மற்றும் இரண்டாவது முறை இரண்டு (02) சம்பள உயர்வுகள். ஏழு (07) சம்பள உயர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மனுவில் கூறுவது சரியானதே.**<br>**(இ) மனுதாரரால் முன்வைக்கப்பட்ட** | மனுதாரர் கோரும் நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் குழுவிடம் காணப்படாமை. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | சேவையை இடைநிறுத்தியதாகவும், ஒழுக்காற்று நடவடிக்கைக்கு பின்னர் மீண்டும் சேவையில் அமர்த்தியதன் பின்னர், சதித்திட்டம் தீட்டி ஒரு தொகை கடிதங்களை மறைத்து அக்குற்றத்தை தம்மீது சுமத்தியவாறு மீண்டும் 2017.03.02ஆந் திகதி சேவையை மீண்டும் இடைநிறுத்தியதாகவும், இதன்போது மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின்போது தாம் பெற்றிருந்த 5 சம்பள ஏற்றங்களை தற்காலிகமாக ஒத்திவைத்து, கிடைக்கவிருந்த 2 சம்பள ஏற்றங்களை இரத்துச் செய்தமையால் தாம் பாரிய அழுத்தங்களுக்கு ஆளானதாகவும், மேலும், தபால் அலுவலகத்துக்கு அருகாமையில் வசிக்கும் தாம் அலுவலகம் அமைந்துள்ள காணிக்குள் அத்துமீறி உள்நுழைந்ததாக வழக்குத் தாக்கல் செய்து தெண்டம் விதிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், இத்தகைய அநீதிகள் மற்றும் தமது நோய்நிலைமைகளுக்கு மத்தியில் கடமையாற்றுவது அசௌகரியமாகக் காணப்பட்டமையால், விண்ணப்பமொன்றை முன்வைத்து 2018.06.15ஆந் திகதி ஓய்வுபெற்றதாகக் கூறும் மனுதாரர், தமக்கு இழைக்கப்பட்டுள்ள பாரிய அநீதியைக் | உண்மைகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தேவையான ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. | |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | **கருத்தில் கொண்டு, தமக்கு இல்லாதொழிக்கப்பட்ட 7 சம்பள ஏற்றங்களையும் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த காலப்பகுதிக்கான நிலுவை சம்பளத்தையும் பெற்றுத் தருமாறு கோரியுள்ளார்.** | | |
| **3) விதப்புரை வழங்குவதற்காக ஒத்திவைக்கப்பட்ட மனுக்கள்** | | | | |
| **பாதுகாப்பு அமைச்சு** | | | | |
| 61 | திரு.எச்.எல்.சமந்த குமார COM/PP/2025/94 சமர்ப்பித்தவர்: கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்றவர்) ஜீ.டீ. சூரியபண்டார பா.உ.<br><br>2025.03.14ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்புடைய இலக்கம்: MOD/DEF/14/22/03/PPC/08<br><br>திகதி : 2017.11.29 | தாம் 1997.01.24ஆந் திகதி இலங்கை விமானப் படையில் சேவையில் இணைந்து 11 வருட 10 மாத கால சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்கையில் 2008.11.04ஆந் திகதி போலியான குற்றச்சாட்டின் மீது, ‘சேவை இனிமேல் தேவைப்படுவதில்லை’ எனும் பிரிவின் கீழ் விமானப்படை சேவையிலிருந்து நீக்கியதாகவும், அப்போது யுத்தத்தின்போது ஏற்பட்ட காயங்கள் காரணமாக அங்கவீனமடைந்திருந்த தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணையேதும் நடாத்தப்படவில்லை எனவும், சேவையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் தோல்வியடைந்ததாக குறிப்பிடும் மனுதாரர், தமக்கான நீதியை நிறைவேற்றி வைக்குமாறு | “விமானப்படை தரநியமங்களுக்கு ஏற்ப இசைவாக்கம் பெறாத விமானப்படை வீரருக்கு வழங்கப்படும் எச்சரிக்கை எனும் தலைப்பிலான 2006.06.26ஆந் திகதிய இறுதி எச்சரிக்கைக் கடிதத்தில் உள்ள கையொப்பம் மனுதாரருடையதாக என்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு முன்வைப்பதற்கு குழு தீர்மானித்ததுடன்,<br>இந்த மனுவை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. | விதப்புரை வழங்குவதற்காக ஒத்திவைக்கப்பட்டது |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | கோரியுள்ளார். | | |
| **கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு** | | | | |
| 62 | திரு.எச்.கே.பீ.சீ. ஜயசிங்ஹ<br><br>COM/PP/2025/15<br><br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ ரோஹிணி குமாரி விஜேரத்ன , பா.உ.<br><br>2025.02.25 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>ED/05/152/05/2022/1-01 | தான் அதிபர் சேவையின் தரம் 1 பதவி உயர்விற்கான நேர்முகப் பரீட்சைக்கு தோன்றியிருந்தாலும், வினைத்திறன் காண் தடைப் பரீட்சை பூர்த்தியடையாத காரணத்தினால் , ஏற்புடைய வினைத்திறன் காண் தடைக்கான சலுகைகளைப் பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட பதவி உயர்வுக்குத் தோற்றுமாறு தனக்கு அறிவித்ததாகவும், தான் சம்பந்தப்பட்ட வினைத்திறன் காண் தடைக்கான சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்த பின்னர் தனக்கு வினைத்திறன் காண் தடைக்கான சலுகைக் கிடைக்கப் பெற்றதாகவும், தொடர்புடைய ஆவணத்தை தனது தனிப்பட்ட கோவைக்கு இணைப்பதற்காக அலுவலகத்திற்கு வழங்கியிருந்தாலும் இதுவரையிலும் அந்த பதவியுயர்வு கிடைக்கவில்லை என குறிப்பிடும் மனுதாரர், தனக்கு 2015.12.07 ஆந் திகதி கிடைக்கவிருந்த அதிபர் சேவையின் தரம் 1 இற்கு தரம் உயர்த்தி ஏதுவான சம்பளத்தையும் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | அனைத்து விடயங்ளையும் கருத்திற்கொண்ட குழு, இது தொடர்பாக கருணை அடிப்படையில் கவனம் செலுத்தி இதனை முன்மாதிரியாகக் கொள்ளாது, மனுதாரருக்கு ஏதேனும் நிவாரணமொன்றை வழங்க முடியுமா என்பது தொடர்பாக குழுவிற்கு அறிவிக்குமாறு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட சமூகமளித்திருந்த அலுவலர்களிடம் விதந்துரைத்தது. | விதப்புரை வழங்குவதற்காக ஒத்திவைக்கப்பட்டது |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 63 | திரு.ஏ.எல்.எம். முக்தார் COM/PP/2025/60 சமர்ப்பித்தவர்: கௌரவ இம்ரான் மகரூவ், பா.உ.<br><br>2025.03.03ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்புடைய இலக்கம்: ED/4/58/1/8/173/65 | தாம் இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு மிகைஊழியர் அடிப்படையில் வகுப்பு 111இன் திட்டமிடல் பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும், வகுப்பு 1இற்கான பதவியுயர்வினைப் பெற்றுக்கொண்டதாகவும், கல்வி அமைச்சின் செயலாளரது, 4/பணிப்/ஆ/2/09 மற்றும் 1995.12.20ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக நான்கு சம்பள ஏற்றங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் தாம் கல்வி அமைச்சிடமிருந்து 2022.11.05ஆந் திகதி நான்கு சம்பள ஏற்றங்களைக் கோரியபோதிலும், வழங்கவில்லை எனவும், 1998.12.08ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், இணைந்த மற்றும் நாடளாவிய சேவைகளிலான உத்தியோகத்தர்களுக்கு நான்கு சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சமாந்திர சேவைகளான இலங்கை திட்டமிடல் சேவைப் பிரமாணத்தின் பிரகாரம், 2009.06.20ஆந் திகதி முதல் மிகை ஊழியர் அடிப்படையில் நியமனங்களைப் பெற்றுக்கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு | | மனுதாரரின் அறிவித்தலுக்கு ஏற்ப, அவரது பங்கேற்பின்றி இந்த மனுவினை விசாரித்தபோதிலும், அவரது கருத்துக்களையும் கேட்டறிந்து விதப்புரைகளை முன்வைக்க வேண்டுமென தீர்மானித்த குழுவானது எதிர்வரும் தினத்தில் மனுதாரருடைய பங்கேற்புடன் இந்த மனுவினை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டுமென தீர்மானித்தது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | நான்கு சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டுள்ளமையால், இது தொடர்பில் விசாரணையை மேற்கொண்டு தமக்கு 04 சம்பள ஏற்றங்களை வழங்குமாறு பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் கல்வி அமைச்சுக்கும் பணிப்புரை விடுக்குமாறு கோரியுள்ளர். | | |
| **பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு** | | | | |
| 64 | திரு. ஆர். ஏ. பிரசன்ன சமரசேகர<br><br>COM/PP/2025/11<br>கௌரவ கோசல நுவன் ஜெயவீர, எம்.பி.<br><br>20.02.2025 அன்று மதிப்பாய்வு செய்யப்பட்டது.<br><br>அமைச்சு குறிப்பு: 02/03/23/26/2022<br><br>தேதி: 2023.01.24 | ஒழுங்கு நடவடிக்கை உத்தரவு பிறப்பிக்கப்படுவதால் தலைமை காவல் ஆய்வாளர் பதவிக்கு பதவி உயர்வு பெறும் வாய்ப்பு இழக்கப்படுவதாகவும்,<br>எனவே, தொடர்புடைய ஒழுங்கு நடவடிக்கை உத்தரவை நியாயமான முறையில் நிவாரணம்/நீக்கம் செய்ய வேண்டும் என்றும் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) முறையான ஒழுங்கு விசாரணை நடத்தப்பட்டு ஒழுங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.<br><br>(ஆ) இருப்பினும், சம்பவத்தில் தொடர்புடைய மற்ற அதிகாரிகள் விடுவிக்கப்பட்டு, மனுதாரர் மட்டுமே குற்றவாளி எனக் கண்டறியப்பட்டதால், மனுதாரர் மீது தவறு இழைக்கப்பட்டுள்ளது<br><br>(இ) சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீடுகள் கால அவகாசத்தின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டுள்ளன. | சம்பவத்தில் தொடர்புடைய மற்ற அதிகாரிகளை விடுவித்து, மனுதாரரை மட்டுமே குற்றவாளி என்று கூறி மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதால், நிவாரணம் பெறுவதற்கான சாத்தியக்கூறு உள்ளதா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. தொடர்புடைய அறிக்கையைப் பெற்ற பிறகு குழுவின் பரிந்துரை வழங்கப்படும். |
| **பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு** | | | | |
| 65 | திரு. டபிளியூ. ஏ. ஏ. கே. அஜித் விக்ரமசிங்க<br>COM/PP/2025/72 | 1981.08.03ஆம் திகதி முதல் மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் | (அ) 08.06.2023 அன்று நடைபெற்ற பொது மனுக்கள் குழுவில் பரிசீலிக்கப்பட்ட | மனுதாரரின் பிரத்தியேகக் கோப்பு மற்றும் அவரால் பெயர் |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | சமர்ப்பித்தவர்: கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்ஹ பா.உ. 2025.03.11ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: PL/6/3/COM/PP/2019/2369 | திணைக்களத்தில் விவசாய விரிவாக்கல் சேவை பதவியில் இணைந்து சேவை ஆற்றியதாகவும், 1991.03.13ஆம் திகதி முதல் பொய்யான குற்றச்சாட்டின் பேரில் சிறைப்பிடித்து, நீதிமன்றத்தில் பொய்யான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும், 1994.10.19ஆம் திகதி முதல் தன்னை விடுதலை செய்ததாகவும், 1996.05.21ஆம் திகதி முதல் மீண்டும் சேவையில் அமர்தி நிலுவைச் சம்பளம் வழங்கியதாகவும், சிறைவாசம் அனுபவித்த காலப்பகுதியில் தடைதாண்டல் பரீட்சைகளை எழுதத் தவறியதாகவும், 1998.08.23ஆம் திகதி அந்தப் பரீட்சையில் தாம் சித்தியடைந்ததாகவும், அதன் அடிப்படையில் 1996.10.07ஆம் திகதி முதல் மேல் மாகாண அரச சேவைக்கு மீண்டும் இணைக்கப்பட்டதாகவும், அதன்பிறகு தனக்கு உரிய காலப் பகுதிகளில் வழங்க வேண்டிய பதவி உயர்வுகளை வழங்க வேண்டுமென கோரியபோதிலும், அது தொடர்பில் மேல் மாகாண சபைக்கு மனுக்களை சமர்ப்பித்த போதிலும், நிவாரணம் கிடைக்கவில்லை எனக் கூறும் மனுதாரர் தாம் இழந்த பதவி உயர்வுகளை வழங்குமாறும், அதற்கு ஏற்ற வகையிலான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை | விஷயங்கள்<br><br>(ஆ) 08.06.2023 தேதியிட்ட குழுவின் அறிவிப்பின்படி, மனுதாரர் தொடர்புடைய விண்ணப்பப் படிவத்தை 09.06.2023 அன்று மேற்கு மாகாணத்தின் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறைக்கு அனுப்பியுள்ளார், மேலும் 01.10.2024 அன்று நடைபெற்ற மேற்கு மாகாண சபை பொது சேவை ஆணைக்குழுவின் கூட்டத்தில், மனுதாரர் திரு. விக்கிரமசிங்கவை 01.07.2004 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மேற்கு மாகாண சபை பொது சேவையின் தொழில்நுட்ப சேவையின் விலங்கு மேம்பாட்டு ஆலோசகர் தரம் I க்கு பதவி உயர்வு செய்வது அங்கீகரிக்கப்பட்டு, மேற்படி முடிவை 12.11.2024 அன்று மேற்கு மாகாண சபை பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்டுள்ள அவருடன் ஒரே காலப்பகுதியில் பணியாற்றிய ஊழியர்களினதும் பிரத்தியேகக் கோப்புக்களையும் ஆராய்ந்து மனுதாரருக்கு மேற்குறித்த பதவி உயர்வு வழங்கும்போது ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய்ந்து அது பற்றிய அறிக்கையொன்றை குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளருக்கு குழு அறிவுறுத்தல் வழங்கியது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | வழங்குமாறும், இழைக்கப்பட்டுள்ள அநீதி தொடர்பில் தொடர்பில் நியாயமான இழப்பீட்டை வழங்குமாறும் கோரி இந்த மனு சமர்ப்பித்துள்ளார். | | |
| 66 | திரு.எஸ்.எம். விராஜ் குமார சமரவீர COM/PP/2025/24 சமர்ப்பித்தவர்: கௌரவ ஈ.எம்.பஸ்நாயக்க, பா.உ.<br><br>2025.05.20ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்புடைய இலக்கம்: MPA/PSD/Sab<br><br>(தொகுதி 11) | தாம் 1999ஆம் ஆண்டில் பணியில் இணைந்து தற்போது மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு திட்டமிடல் விடயம் தொடர்பிலான பணிகளை ஆற்றுவதாகவும், 2009.04.19ஆந் திகதி இடம்பெற்ற இலங்கை திட்டமிடல் சேவைக்கு ( மிகை ஊழியர் அடிப்படையில்) ஆட்சேர்க்கும் பரீட்சையில் சித்தியெய்திய பின்னர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியதாகவும், ஆட்சேர்க்கையில் நியாயமற்ற மற்றும் அடிப்படையற்ற இந்த நியமனம் வழங்கப்பட்டதாகவும், இந்த நியமனத்தைப் பெற்றுக்கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு சமனான தகுதிகளை பூர்த்தி செய்துள்ள தாம் உள்ளிட்ட சிலருக்கு குறிப்பிட்ட பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடும் மனுதாரர், நியாயமான தீர்வினை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | | இறுதி விதப்புரையினை வழங்குவதற்கு ஒத்திவைப்பதற்கு. |
| 67 | திரு.பீ.எச்.டீ.ஜகத் பண்டித COM/PP/2025/205 சமர்ப்பித்தவர்: கௌரவ நிஷாந்த | தாம் 2020ஆம் ஆண்டில் இலங்கை பொறியியல் தரம் 111இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு | | மீள் விசாரணை செய்யப்பட வேண்டுமென்பதுடன், விதப்புரைகள் முன்வைக்கப்ப |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | சமரவீர, பா.உ.<br><br>2025.05.20ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்புடைய இலக்கம்:<br><br>ES/DIR/J/9(II) | விண்ணப்பித்து 2021இல் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியபோதிலும், இப்பதவி கிடைக்கவில்லை எனவும், தாம் தோற்றிய சிவில் பிரிவின் கீழ் தென் மாகாணத்துக்கு பதவிகள் வழங்கப்படவில்லை எனவும், ஆட்சேர்ப்புக்கான தகைமைகளை (4.1.4 மற்றும் 4.1.6)பூர்த்தி செய்துள்ளமையால் இலங்கை பொறியியலாளர் சேவையில் தரம் 111இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் உரிய நியமனத்தை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. | | டவில்லை. |
| **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 68 | திரு. டி.எம்.ஆர். ராஜசிங்ஹ<br>COM/PP/2025/56<br>சமர்ப்பித்தவர்: கௌரவ ஜே.சீ. அலவத்துவல பா.உ.<br>2025.04.08 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: MF1/11/03/11/08/COPP/GEN | தான் 2010.09.02ஆந் திகதியிலிருந்து முகாமைத்துவ உதவியாளராக இலங்கை மத்திய வங்கியில் சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றியதாகவும், திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து கடமைக்குச் சமுகமளிக்க முடியாமல் போனதாகவும், மீண்டும் தொழிலை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கியில் மேன்முறையீடு செய்துள்ளதாகவும், இவ்விடயத்தைக் கருணை அடிப்படையில் கவனத்தில் கொண்டு மீண்டும் தொழிலில் அமர்த்துமாறு கோரி உள்ளார். | (அ) மீண்டும் தொழிலில் இணைத்துக் கொள்வதற்காக அவரது உடல் தகுதியை மருத்துவ குழு ஒன்றின் மூலம் பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும்,<br>(ஆ) உள்ளக ஒழுக்காற்று விசாரணையை மீண்டும் ஆரம்பிக்குமாறும், எதிர்த் தரப்பான இலங்கை மத்திய வங்கியின் மனித வளங்கள் பிரிவின் பணிப்பாளருக்கு விதப்புரை வழங்கப்பட்டதோடு அது பற்றிய அறிக்கையை 06 மாத காலத்தினுள் குழுவுக்கு | சம்பந்தப்பட்ட அறிக்கையை பரிசீலித்த பின்னர் குழுவின் விதப்புரையை வழங்குதல். |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | ஆற்றுப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது. | |
| **கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு** | | | | |
| 69 | திரு. பீ. சஞ்ஜீவ பிரசாத் பர்னாந்து COM/PP/2025/87 சமர்ப்பித்தவர்: கௌரவ சதுர கலப்பத்தி பா.உ. 2025.03.19 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: MWCA&SE/ADM/05/02 -2023<br><br>திகதி : 2023.07.18 | 2010 மார்ச்சு 01ஆந் திகதியிலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது 2011.06.01ஆந் திகதி தனது மகள் சுகவீனமுற்றிருப்பதாக தொலைபேசி அழைப்பின் மூலம் முறையாக அறிவித்து அன்றைய தினத்தில் மட்டும் கடமைக்குச் சமுகமளிக்காததை அடிப்படையாகக் கொண்டு, தான் தொழிலைக் கைவிட்டு சென்றுள்ளதாகக் கருதி செயலாற்றி உள்ளபோதும் தான் குறித்த லீவு நாளுக்கு முன்னரும் பின்னருமான இரண்டு நாட்களிலும் கடமைக்குச் சமுகமளித்திருந்ததாகவும், அதிகாரிகள் மற்றும் தொழில் நியாய சபையில் முன்வைத்த கோரிக்கைகளுக்கு பலன் கிட்டவில்லை எனவும், 2017.03.03ஆந் திகதி தொழில் நியாய சபைத் தீர்ப்பாளரினால் 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் கீழ் சமுர்த்தி அதிகார சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த எல்லா வழக்குகளும் நிராகரிக்கப்பட்டன எனவும், மீண்டும் அரசாங்க சேவையில் நிருவாக ரீதியாக பழிவாங்களுக்கு இலக்கானவர்களுக்கு நிவாரணம் வழங்கும் குழுவில் செய்யப்பட்ட மேன்முறையீட்டை | (அ) விரிவான அறிக்கை ஒன்றை குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு குழு கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலு வூட்டுகை அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கியது.<br><br>(ஆ) மனுதாரருக்கு தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதற்கு ஏதேனும் சான்றுகள் இருப்பின் அவை அனைத்தையும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் குழுவுக்கு கடிதம்மூலம் அனுப்பி வைக்குமாறு கட்டளை இடப்பட்டது. | எதிர்கால குழு அமர்வின்போது இந்த மனுவை மீண்டும் விசாரிக்க குழு முடிவு செய்ததோடு, அதன்போது ஏற்கனவே அழைக்கப்பட்ட அலுவலர்களுக்கு மேலதிகமாக தீவுலப்பிட்டி பிரதேச செயலாளரையும் அழைக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | சமுர்த்தி திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்திய பின்னர், சமுர்த்தி அதிகார சபை இயங்குவந்த காலப்பகுதியில் நிகழ்ந்த சம்பவத்தை அது திணைக்களமாக மாற்றப்பட்டதன் பின்னர் பரிசீலிக்க முடியாதென தெரிவித்ததாகவும் கூறும் மனுதாரர், தன்னுடைய அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் கருதி, தொழிலைக் கைவிட்டுச் சென்றதாக கருதப்படுகின்ற திகதியிலிருந்து வலுவுக்கு வரும் வகையில் அனைத்து வரப்பிரசாதங்கள், நிலுவைச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் தன்னை மீண்டும் தொழிலில் அமர்த்துமாறு கோரியுள்ளார். | | |
| **போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு** | | | | |
| 70 | திரு. டப்ளியூ. லால் அமரசிறி COM/PP/2025/183 சமர்ப்பித்தவர்: கௌரவ பத்மசிறி பண்டார பா.உ. 2025.05.22 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: MTCA/10/1/3/47 திகதி : 2016.12.30 | 1980ஆம் ஆண்டு தொடக்கம் புகையிலிருந்து திணைக்களத்தில் பணியாற்றியதாக 1995.02.22ஆந் திகதியிலிருந்து 2013.11.12ஆந் திகதி வரை கண்காணி கடமைகளை நிறைவேற்றியதாகவும், 1998 ஆண்டுவரை கண்காணி பதவிக்குரிய அனைத்து சம்பளம் மற்றும் வரப்பிரசாதங்கள் தனக்கு வழங்கப்பட்டபோதும், அலுவலக எழுதுநர்களினால் ஏற்பட்ட தவறு காரணமாக தனது சம்பளம் மற்றும் | மனுதாரர் 18 வருடங்களாக கண்காணி பதவியில் பதில் கடமை புரிந்துள்ளதாக தொடர்ச்சியாக கருத்து தெரிவித்துள்ளதால், அந்த 18 வருட காலத்தில் ஆற்றிய சேவை பற்றிய தெளிவுபடுத்தல் குறிப்பு ஒன்றுடன், சேவையாற்றிய இடங்கள் மற்றும் அக்காலப்பகுதியில் நியமிக்கப்பட்டிருந்த மேற்பார்வை உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் | உரிய ஆவணங்கள் கிடைத்த பின்னர் விதப்புரை ஒன்றை வழங்க குழுத் தீர்மானித்தது. |

| தொடர் இல. | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | உத்தியோகபூர்வ பதவிப் பெயர் இழக்கப்பட்டு ஏற்கனவே இருந்த பதவியில் ஒய்வெடுக்கச் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கும் மனுதாரர் 18 வருடங்களாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாததால் தனது பதவி மற்றும் உத்தியோகபூர்வ பதவி பெயரை வழங்கி அதற்கு ஏற்புடையதாக ஓய்வூதியத்தைக் கணிக்குமாறு கோரி உள்ளார். | பதவிகள் போன்ற விவரங்கள் அடங்கலான காப்பு அங்கீகாரம் கடிதத்துடன், தன்னை கண்காணி என விழித்துள்ள கடிதங்கள் அவர் வசம் காணப்படுமாயின் அவற்றை தாமாகவே சான்றுப்படுத்திய பிரதிகளையும் இணைத்து, தான் 18 வருடங்களாக கண்காணியாக சேவையாற்றியதற்கான அனைத்து சான்றுகளின் பிரதிகளை குழுவின் பரிசீலனைக்காக ஒரு மாத காலத்தினுள் சமர்ப்பிக்குமாறு குழு மனுதாரருக்கு பணிப்புரை விடுத்தது. | |

**அட்டவணை II**

மனுவின் மாதிரி படிவம்

கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த மனுவை சமர்ப்பிக்கின்றேன்.

சமர்ப்பிக்கும் உறுப்பினரது கையொப்பம், திகதி மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

(Comment 1 – இக்குறிப்பினை தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரொருவர் மனுவின் மேற்பகுதியில் குறிப்பிட்டு கையொப்பமிடுதல் வேண்டும். (மனுவை உறுப்பினரது காப்புக் கடிதத்துடன் சமர்ப்பிப்பது போதுமானதல்ல)

மனுதாரரின் முழுப் பெயர்:

வசிப்பிட முகவரி: ( அலுவலக முகவரியல்ல)

தேசிய அடையாள அட்டை இலக்கம்:

நிலையான தொலைபேசி இலக்கம்:

கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

ஏனையவை:

திகதி:

(Comment 2 – உதாரணம்- திசாநாயக்க முதியன்சேலாகே பத்ம பண்டார

Comment 3 – உதாரணம்- 65/5, பிலியன்தல வீதி, மஹரகம.

Comment 4 – இந்த மனுவில் கோரப்பட்டுள்ள சலுகைகளுடன் தொடர்புடையதாக இதற்கு முன்னர் மனுவொன்று முன்வைக்கப்பட்டிருப்பின், குறிப்பிட்ட மனுவின் இலக்கத்தை குறிப்பிடுவது முக்கியமானதாகும். )

கௌரவ சபாநாயகர்

இலங்கை பாராளுமன்றம்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர

கோட்டை

கௌரவ சபாநாயகர் அவர்களே,

( தலைப்பு) இழைக்கப்பட்டுள்ள அநீதி, எதிர்பார்க்கும் தீர்வினை வெளிப்படுத்துமொரு சுருக்கமான தலைப்பு)

(Comment 5 – முறையான விதத்தில் லீவு பெற்றிருக்கையில் இல்லாதொழிக்கப்பட்ட தமது தொழிலை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல்.)

(இழைக்கப்பட்டுள்ள அநீதி)

சம்பவம் பற்றிய விபரங்களை தெளிவாக, திகதி சகிதம், குறிப்பிட்ட சம்பவம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள நபர் பற்றிய விபரங்களை குறிப்பிட்ட நிறுவனம் அல்லது அமைச்சுக்கு இலகுவாக கண்டுபிடிக்கக் கூடியவாறு அத்தியவசியமான மற்றும் முக்கியமான விடயங்களை மாத்திரம் கண்ணியமான மொழிநடையில் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்றுபுடையதற்ற விடயங்கள் அங்கு உள்ளடக்கப்படக் கூடாது என்பதுடன், எந்தவொரு கடிதமோ, ஆவணமோ அல்லது அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது.

(Comment 6 – உதாரணம்- திசாநாயக்க முதியன்சேலாகே பத்ம பண்டார எனும் நான் 2015.01.01ஆந் திகதி பயிலுநர் உபபொலிஸ் கான்ஸ்டபிளாக (சொ.கோ.147xx) இலங்கை பொலிஸில் இணைந்து மஹரகம பொலிஸில் பணியாற்றுகையில் 2019.05.30ஆந் திகதி கடுமையாக சுகவீனமுற்றதன் காரணமாக முறையான விதத்தில் 02 நாள் விடுமுறையைக்கு விண்ணப்பித்து பணியிடத்திலிருந்து வெளியேறினேன். ஆனால், நோய் நிலைமை தீவிரமடைந்ததன் காரணமாக களுபோவிலை போதனா வைத்தியசாலையில் 03 வார காலம் வதிவிட சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டி நேர்ந்தது. நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தந்தி மூலம் 2019.06.02ஆந் திகதி பணியிடத்துக்கு அறிவித்தேன். ஆனால், எனக்கு 2019.06.15ஆந் திகதிய கடித்தின் வாயிலாக 2019.06.02ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ( அறிவிக்காமல் சேவைக்கு சமூமகளிக்கவில்லை எனக் குறிப்பிட்டு) சேவையிலிருந்து நீங்கிச் சென்றதாக கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தந்தியின் பற்றுச்சீட்டு, வைத்திய அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் ஏனைய உரிய ஆவணங்களை தேவையேற்படும் பட்சத்தில் முன்வைக்க முடியும். )

( எதிர்பார்க்கும் நிவாரணம்)

கோரப்படும் சலுகை என்ன என்பது பற்றி குறித்துரைத்தல் வேண்டும்.

( மனுதாரரின் கையொப்பம்)......................................................................................

மனுதாரரின் கையொப்பம் / பெருவிரல் அடையாளம் ( எழுதத் தெரியாதவர் சாட்சியாளரொருவரின் முன்னிலையில் தமது பெருவிரல் அடையாளத்தை இடுதல் வேண்டும்)

(Comment 7 – கௌரவ சபாநாயகர் அவர்களே, இது குறித்து ஆராய்ந்து பார்த்து எனக்கு மீண்டும் சேவையினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மரியாதையுடன் கேட்டுக் கொள்கின்றேன். ( இதன்போது நீதியை நிலைநாட்டுமாறு அல்லது நிவாரணத்தை பெற்றுதருமாறு மாத்திரம் கோராது, தாம் எதிர்பார்க்கும் சலுகையை, மேற்குறிப்பிட்ட உதாரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்துரைத்தல் வேண்டும்.